87

உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ங.] 1915-ம் ஆ மே, ஜூன் மீ [இதழ் ரு-சு.

இலௌகிகப் பகுதி.

செல்வம்.

(புதுவைக் கலைமகள் கழகத்தின் 4-வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் செய்த உபன்னியாசத்தின் சுருக்கம்.)

செல்வம் என்பது மணி, பொன், நிலம், தானியம், மாடு, வீடு, தோட்டம் முதலிய பொருள்களென்பர்.

உலகத்தில் சிறியவர் முதல் பெரியவர் ஈறாகவுள்ள ஒவ்வொருவரும் பெரும்பான்மையும் இச் செல்வப் பொருளையே முயன்று தேடுகின்றார்கள். எதற்காக இவர்கள் செல்வத்தைத் தேடுகின்றார்கள்? சுகமடைவதற்காக. ஆகவே சுகமடைவதற்குச் செல்வம் ஆவசிகம் வேண்டுமென்றும், செல்வமில்லையேல் சுகமில்லையென்றும் ஏற்படுகின்றது.

நல்லது, செல்வமுடையவர்களெல்லோரும் சுகத்தை யனுபவிக்கின்றார்களா என்று இப்போது சற்று ஆராய்வோம். அப்

படி ஆராய்வதன் முன்னர், சுகம் எது? அது எப்போது உண்டாகின்றது? என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டுவது ஆவசிகம். சுகமாவது மனோவியாபாரம் ஒழிந்த அவசரத்தில் உண்டாகின்ற ஓர் அனுபவம். மனம் அலைந்து திரிகிறகாலத்தில் நமக்குச் சுகானுபவம் உண்டாதலில்லை. மனோசலனம் அற்றவிடத்திற்றான் சுகமுண்டாகிறது. திருட்டாந்தமாக, நல்ல தூக்கத்தில் நமக்குச் சுகானுபவம் விளங்குகிறது. "நான் சுகமாக நித்திரை பண்ணினேன்" என்று ஒவ்வொருவரும் உரைப்பதை நாம் பன்முறையுங் கேட்கின்றோம். ஏனென்றால், அங்கு மனோவியாபாரம் ஒன்றுமில்லை.

துயிலை யின்பெனச் சொல்லுத லிந்தியத்
தியலு நெஞ்ச மிலாமையி னலன்றோ
பயிலு நெஞ்சம் பயின்று திரிதருஞ்
செயலி னில்லைச் சிறிதுஞ் சுகமரோ.

என்ற சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கும் இதன் உண்மையை நன்கு விளக்கும்.

தூக்கத்தைச் சுகமென்று சொல்லுதல், மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளின் வயப்பட்டு நடக்கும் மனம் அவ்விடத்து இல்லாமையினலல்லவா? ஆதலின், மனம் அலைந்து திரிகிற செய்கையிற் சிறிதும் சுகமுண்டாதலில்லை என்பது இச் செய்யுளின் திரண்ட பொருள்.

இதனல் மனம் அலைந்து திரிகிறகாலத்தில் உண்டாவது துக்கமேயென்பதும், மனவலைச்சல் ஒழிந்தவிடத்திலேயே சுகமுண்டாகுமென்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. ஆனல் மனவலைச்சலுக்குக் காரணமென்ன? அவா, அதாவது உலகப் பொருட்களின்மீதுள்ள ஆசையேயாம். ஆதலினல் அவாவுள்ளவரையில் மன அலைச்சல் நிற்காது, அலைச்சல் நிற்காதவரையில் சுகமுண்டாகாது என்பது நன்றாகத் தெரிகின்றதன்றோ? நிற்க,

இனிச் செல்வமுடையவர்களிடத்துச் செல்வோம். திரண்ட செல்வமுடையவர்களிடத்தும் துக்கமே காணப்படுகிறது. எங்ஙன மெனில், செல்வமுடையவர்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள செல்வத்தைக்கொண்டு திருப்தியடையாமல் மேலுமேலும் பொருள் சேர்ப்பதற்கு, இரவும் பகலும் உழைத்து எவ்வளவோ துன்புறுவதை நாம் காண்கின்றோம். தங்கட்கு வேண்டிய பொருளிருந்தும் இப்படி அவர்கள் துன்பப்படுவதற்குக் காரணமென்ன? ஆசையே. எவ்வளவு பொருளிருந்தால் அவ்வாசை யடங்கும்? ஆசைக்கோ ரளவுண்டோ?

"ஆசைக்கொ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீ திலே
யாணைசெல வேநினைவ ரளகேச னிகராக
வம்பொன்மிக வைத்தபேரும்

நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவரெல்லாம்

யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
முறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதுநா னெனக் குளறியே
யொன்றைவிட் டொன்றுபற்றிப்

பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்தநிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணாநந்தமே."

என்று கூறினார்கள் நமது தாயினு மினிய தாயுமான சுவாமிகள்.

உலகமெல்லாம் ஒருசேரக்கட்டி யரசாட்சிசெய்பவர்களும் கடல்மீதிலேயும் ஆணைகட்டியாள நினைப்பார்களானால், குபேரனுக்கு நிகராகத் திரண்ட செல்வம் படைத்துள்ளவர்களும் இரசவாத வித்தைக்கு விரும்பி யலைவார்களானால், வெகுகாலம் இவ்

வுலக இன்பத்தி லுழன்றவர்களும் இன்னும் நீண்டகால மிருப்ப தற்குக் காயகற்ப முறைகளைத் தேடி அது கிடைக்காமையால் நெஞ்சு புண்படுவார்களானால் ஆசையை ஓரளவுபடுத்த எங்ஙனம் முடியும்?

இப்படி ஆசை காரணமாக அவர்கள் மேலுமேலும் பொருள் தேடுதலினாலும், அப்பொருளைக் காத்தலினாலும், அதை விருத்தி பண்ணுவதினாலும், அவர்கள் மனம் பலவழிகளில் அலைந்து திரியவேண்டியிருக்கிறது. ஆகவே, சதா அலைந்துகொண் டிருக்கின்ற மனத்தில் சுகம் எப்படி யுண்டாகும்? அலைவை யிறந்தவிடத்தன்றோ ஆநந்தம்? உண்மையில் துன்பந்தான் உண் டாகும்.

ஈட்டுதலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பம் — காத்தல்
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.

என்ற பெரியோர் வாக்கியம் இதுபற்றித்தான் எழுந்ததுபோலும்.

இனி, செல்வ மில்லாதவனாகிய ஒரு வறியவனிடத்துச் செல்வோம். நாள் முழுதும் வேலைசெய்து கிடைத்த கூலியைக் கொண்டு அரிசி முதலிய உணவுப் பொருள்களை வாங்கிச் சமைத்து உண்டு, யாதொரு கவலையுமின்றி மனைவி மக்களோடு ஆநந்தமா யிருக்கின்ற ஓர் கூலியாளனையும் பார்க்கின்றோம். செல்வ மில்லாம லிருந்தும் இவனுக் குண்டான சுகத்திற்குக் காரணமென்ன? மனோவியாபாரமில்லாமையே. மனம் அலைந்து திரிதற்குக் காரண மான அவா இல்லாமையே.

இந் நியாயங்களால் செல்வமுடையவர்களெல்லாரும் சுக மனுபவிக்கின்றார்களென்றும், செல்வ மில்லாதவர்க ளெல்லாரும் துக்க மனுபவிக்கின்றார்களென்றும் சொல்வதற்கில்லை. செல்வ முடையவர்கள் துக்க மனுபவித்தலையும், செல்வமில்லாதவர்கள் சுக மனுபவித்தலையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆகவே, உண்மையில் சுகத்தை யுண்டுபண்ணுகிற செல்வம் இதுவேயல்ல

வென்பதும், துக்கத்தை யுண்டுபண்ணுவது செல்வ மில்லாமை யாகிய வறுமையே யல்லவென்பதும் வெளிப்படையாக விளங்குகின்றதன்றோ?

ஆனல் உண்மையான செல்வமெது? உண்மையான வறுமையெது? என்று கேட்பீர்களே. ஓதா துணர்ந்த மூர்த்திகளாகிய நமது குமாருருபர சுவாமிகள், அச்செல்வம் இன்னதென்றும், அவ் வறுமை இன்னதென்றும் செவ்வனே தெரிவிக்கின்றார் பாருங்கள்.

ஆசிரியப்பா.

கொடியு முரசுங் கொற்றவெண் குடையும்
பிறர்கொளப் பொறாஅன் றனே கொண்டு
பொதுநீங்கு திகிரி திசைதிசை போக்கிச்
செவியிற் கண்டு கண்ணிற் கூறி
யிருநிலம் புரக்கு மொருபெரு வேந்தன்
மிக்கோ னொருவன் வெறுக்கை நோக்குழித்
தொக்கதன் வெறுக்கை சுருங்கித் தோன்ற
விழைப்புறு விழும மெய்தி யழுக்கறுத்து
மற்றது பெறுதற் குற்றன தெரீஇ
யயிற்சுவை பெறாஅன் றுயிற்சுவை யுறாஅன்
மாணிழை மகளிர் தோணலங் கொளாஅன்
சிறுகாற்று வழங்காப் பெருமூச் செறிந்து
கவலையுற் றழிவதூஉங் காண்டு மதாஅன்று
விறகெடுத் தூர்தொறுஞ் சுமந்து விற்றுக் – கூலிகொண்டு
புற்கையு மடகு மாந்திமக் களொடு
மனையும் பிறவு நோக்கி யயன்மனை
முயற்சியின் மகனை யிழித்தன னெள்ளி
யெனக்கிணை யிலையென வினையன்மற் றொருவன்
மனக்களிப் புறீஇ மகிழ்வதூஉங் காண்டும் – அதனல்
செல்வ மென்பது சிந்தையி னிறைவே
யல்கா நல்குர வவாவெனப் படுமே
யையுணர் வடக்கிய மெய்யுணர் வல்லதை

யுவாக்கடல் சிறுக வுலகெலாம் விழுங்கும்
அவாக்கடல் கடத்தற் கரும்புணை யின்றே – அதனால்
....
வலனுயர் சிறப்பிற் புலியூர்க் கிழவநின்
னருள்பெற் றுய்தற் குரிய னியானெனிற்
பல்லுயிர்த் தொகுதியும் பவக்கட லழுந்த
வல்லல் செய்யு மவாவெனப் படுமவ்
வறுமையி னின்றும் வாங்கி
அறிவின் செல்வ மளித்தரு ளெனக்கே.

(வரும்.)

பத்திராதிபர்.

புதுவைக் கலைமகள் கழகம்
நான்காவது ஆண்டுவிழாக் கொண்டாட்டம்.

அறிவின் மிக்கார் பல்லோர் குழுமி நடத்தப்பெறும் ஷை கழகத்தின் 4-வது ஆண்டுவிழாக் கொண்டாட்டமானது, புதுவை ஸ்ரீ பாலைய சுவாமிகள் மடாலயத்தில், அழைப்புப் பத்திரத்திற் கண்டவண்ணம், 1915-ம் ஆ மே மீ 27, 28, 29, 30 இத் திகதிகளில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அக்கிராசனம் அமர்ந்து சபையை அலங்கரித்தருள, கழகத்தின் அவயவிகள் சிலரும், உள்ளூர் வெளியூர் வித்துவான்கள் பலரும் அரிய பெரிய உபன்னியாசங்கள் செய்து சபையைக் களிக்கச் செய்தனர்.

27 – 5 – 15 வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு, கலைமகள் கழகத்தார் வேண்டுகோளின்படி, ஷை கழகத்தின் 4-வது வருடோற்சவத்தை முன்னிட்டு, தமது உபாசனமூர்த்தியாகிய ஸ்ரீவல்லீசேனா சமேத ஸ்ரீ சிவசுப்ரமண்யக் கடவுளோடு எழுந்தருளிய திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள், வாத்திய முழக்கோடு சபையார்களும் அன்பர்களும் எதிர்கொண்டு வரவேற்க, மிக்க விபவத்துடன்

இரவு 8 மணிக்குச் சபா பிரவேசம் செய்தருளினார்கள். கடவுள் வாழ்த்து நடைபெற்றதும், மகாஜன சபையார் வேண்டுகோளின்படி சுவாமிகள் அக்கிராசனம் அமர்ந்தருளினார்கள். உடனே கழகத்தின் காரியதரிசி ஸ்ரீமான் தி. திருப்புளிசாமி ஐயாவர்கள் வந்தனோபசார பத்திரம் படித்து, சுவாமிகளுக்கும் மகா ஜனங்களுக்கும் சமர்ப்பித்த பின்னர், சுவாமிகள் தேன்மடை திறந்தாங்கு, முகவுரைப் பிரசங்கம் செய்து யாவர் மனமும் களி தூங்கச் செய்தருளினதும், தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் உ. வே. தி. வேங்கடராமையங்காரவர்கள் சுவாமிகளது பிரசங்கத்தின் பெருமையை எடுத்துப் புகழ்ந்து தமது ஆநந்தத்தைத் தெரிவித்தார்கள். அன்று அவ்வளவோடு சபை கலைந்தது.

28 – 5 – 15 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு, சுவாமிகள் அக்கிராசனம் அமர, சபை கூடிற்று. கடவுள் வாழ்த்து நடைபெற்றதும், சுவாமிகள் அநுமதிபெற்று, கழகத்தின் காரியதரிசியார் வருடாந்த அறிக்கைப் பத்திரம் வாசித்து யாவர்க்கும் வழங்கியவுடன், கலைமகள் கழகத்தின் உதவி அக்கிராசனாதிபதியும் கலைமகள் பத்திராதிபருமான ஸ்ரீமான் சி. பங்காருப்பத்த ரவர்கள் ஷை கழகத்தின் பிரதிநிதியாக எழுந்து நின்று சபையோரைப் பார்த்து, இப்போது ஐரோப்பாவில் நடைபெறும் கோரமான யுத்தத்தில் நமது இராஜாங்கத்தாருக்கும் நேச வல்லரசுகட்கும் கொடிய பகைவர்களால் நேர்ந்துள்ள இடுக்கணைப்பற்றிப் பெரிதும் வருந்துகின்றோமென்றும், இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர்கள் குடிகளாயுள்ள நாம் ஒவ்வொருவரும் உடலினாலோ பொருளினாலோ உயிரினாலோ அவர்கட்கு உதவிசெய்யக் கடமைப்பட்டுள்ளோமென்றும், இப்போது வேறு வழியில் அவர்கட்கு உதவிசெய்ய நமக்குச் சக்தியில்லை யாதலின், நமது இராஜாங்கத்தார் கூடிய விரைவில் சத்துருக்களை அழித்து வெற்றிபெறுமாறு எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வழிபடுகின்றோமென்றும், மாட்சிமை தங்கிய நமது ருடியாசுத் தலைவ ரவர்கட்கும், மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜ்யார்ஜ் சக்கரவர்த்தி யவர்கட்கும் நமது அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோமென்றும் பேசி யமர்ந்தனர்.

பின்னர், தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளை யவர்களால் "இறைவன் வியாபகம்" என்பதும், புதுவை ஸ்ரீமான் A. ஜெகநாத நாயடு அவர்களால் "பெரியாரைத் துணைக்கோள்" என்பதும், பொன்மார் ஸ்ரீமான் நடேச முதலியா ரவர்களால் "அறிவு" என்பதும் உபன்னியசிக்கப்பட்டன. பிறகு சுவாமிகளின் அமிழ்த மழையெனும் முடிவுரையோடு அன்று சபை கலைந்தது.

29 – 5 – 15 சனிக்கிழமை மாலை நாலு மணிக்குச் சபை கூடிற்று. கடவுள் வாழ்த்து முடிந்ததும், புதுவைக் கலைமகள் கழகத்தின் காரிய தரிசி ஸ்ரீமான் தி. திருப்புளிசாமி ஐயரவர்கள் "வாய்மை" என்பது பற்றியும், மணிமங்கலம் ஸ்ரீமான் திருநாவுக்கரசு முதலியா ரவர்கள் "தமிழ்" என்பதுபற்றியும், சென்னை ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியா ரவர்கள் "தோல்காப்பியம்" என்பதுபற்றியும் சென்னை ஸ்ரீமான் க. சதாசிவ செட்டியார் B. A, அவர்கள் "தேவார நுட்பங்கள்" என்பதுபற்றியும் பிரசங்கித்தார்கள். சுவாமிகளது அருமையான முடிவுரையோடு சபை கலைந்தது.

30 – 5 – 15 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குச் சபை கூடிற்று. கடவுள் வாழ்த்து நடந்தபின், திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீமான் தி. வடிவேலு முதலியா ரவர்களால் "அடக்கமுடைமை" என்பதும், தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளை யவர்களால் "செய்யவேண்டுவது யாது?" என்பதும் உபன்னியசிக்கப்பட்டன. சுவாமிகளது அழகான முடிவுரையோடு சபை கலைந்து, மாலை 4 மணிக்குச் சபை கூடியது. கடவுள் வாழ்த்துக்குப் பிறகு, சென்னை ஸ்ரீமான் M. A. சோமசுந்தர முதலியா ரவர்கள் "தெய்வச் சேக்கிழார்" என்பதுபற்றியும், திருக்கோவலூர் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளை யவர்கள் "நன்னட்பு" என்பதுபற்றியும், புதுவைக் கலைமகள் பத்திராதிபர் ஸ்ரீமான் சி. பங்காருப்பத்த ரவர்கள் "செல்வம்" என்பதுபற்றியும், சென்னை ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியா ரவர்கள் "உடலோம்பல்" என்பது பற்றியும், புதுவை ஸ்ரீமான் A. V. முத்தைய முதலியா ரவர்கள் "நாம் முன்னுக்கு வருவதெப்படி?" என்பதுபற்றியும், சென்னை ஸ்ரீமான் S. சச்சிதானந்தம்பிள்ளை B. A. L. T. அவர்கள் "ஊழ்வலியும் ஜீவ சுதந்தரமும்" என்பதுபற்றியும் உபன்னியசித்தார்கள். பின்னர், சுவாமிகள் முடிவுரையென்னும் பேரமிழ்தப் பெருமழை பொழிந்து அன்பர் யாவரையும் ஆநந்தக்கடலில் அமிழ்த்திவிட்டார்கள். உடனே திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீமான் T. L. ஞானசம்பந்த முதலியா ரவர்களால் வாழ்த்துப்பாடலும், கழகத்தின் காரியதரிசியாரால் நன்றி செலுத்தலும் நடந்தபின்னர், கடவுள் வாழ்த்தோடு கலைமகள் கழகத்தின் நான்காவது வருடோற்சவம் சம்பூர்த்தியடைந்தது.

கழகத்தின் வருடோற்சவ ஆரம்ப முதல் கடைசி வரையும் தளரா ஊக்கத்தோடு அன்பர்கட்கு வேண்டிய உதவிபுரிந்த கலைமகள் பத்திராதிபர் ஸ்ரீமான் சி. பங்காருப்பத்த ரவர்கள், காரியதரிசி ஸ்ரீமான் தி. திருப்புளிசாமி ஐயரவர்கள் முதலான கழகத்தின் அங்கத்தவர்களது

அன்புடைமையும், சபைக்கு விஜயஞ்செய்த அன்பர் பலரையும், யாதொரு குறையுமின்றி ஒப்புடன் முகமலர்ந்து இனிய உணவாதிகளால் உபசரித்து மகிழ்வித்த உபசரணைச் சங்கத் தலைவர் புதுவை ஸ்ரீமான் கிரந்தே - சிவ **சங்கா செட்டியா** ரவர்கள் அன்புடைமையும் பெருந் தகைமையும் என்றும் மறக்கற் பாலனவன்று. இவர்கள் நன்முயற்சி இனிது வாழ்க. சபைகளின் வருடோற்சவம் நடைபெறு முறை இவ்வாறு என்பதை முன்மாதிரியாகப் பலர் அறிந்துகொள்ளும் வண்ணம் இவ் வருடோற்சவம் நடைபெற்றது என்று சொல்லுதல் மிகையாகமாட்டாது.

இவ்வாறே நமது கழகம் மேலுமேலும் விருத்திக்கு வருதல் தமிழ்மகள் செய்த பெரும் புண்ணியத்தின் பலனாகும். எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் கலைமகள் கழகம் நீடூழி வாழ்வதாக. சுபம்.

தி. வடிவேலு முதலியார்,

திருவெண்ணெய்நல்லூர்.

புதுவைக் கலைமகள் கழகம்
நான்காவது வருடக் கொண்டாட்ட வாழ்த்துப்பா.

நேரிசை யாசிரியப்பா.

மணிவளர் சாகரத் தணிவளர் சீகர
மெறிமணி முத்தமுஞ் சிறுமதி நுதலா
ரரிலுடன் றணங்கெறி குருமணிக் குவைகளும்
பல்வலச் சுத்தியி னெல்வயி னாமும்
பானுடன் பரக்கக் கூனுடைப் பசுங்கதிர்
பகலிர வமையா நிகரில் பதிசெயும்
பதுமனூர் மனைநிகர் புதுவைமா நகரின்
தண்டுத லமையாத் தகைபெறுந் தினகரன்
மண்டபே ரெழிலுடை மதிபெறு மதிபொரு
நாவலர் பாவலர் நவின்றணி மிகச்செயுங்
கலைமகள் கழகம் நிலைபெறு நான்காம்
மேன்மைகொள் வருட விழாக்கொண் டாட்டத்
தளவில் பாடையிற் பளகின் மொழியாந்
தமிழ்மிகத் தெரித்தரு டகைபெறு மகத்தியர்

கலைஞான முடன்பெருஞ் சிவஞான மதுபெறப்
பரஞான மருள்செய் பெருஞான வேற்கரன்
உயர்வுடை வடிவென வுலகர் போற்றுந்
தண்முகங் கொண்டருள் சண்முக முனிவரர்
ஆர்தரு மவைக்குச் சீர்பெறுந் தலைவராய்ச்
சிற்றறி வுடையரைச் சிவமுறச் செய்யு
மரும்பெரு மூற்ற லரியதி னரிதே
முத்தினஞ் சொல்லமை முத்தைய பிள்ளை
செய்ய வேண்டுவ தியாதுடன் சீர்பெறும்
அறைதற் கொவ்வா விறைவன் வியாபகம்
முதுமொழி கொண்ட மூதறி வுரைதான்
எத்திறத் தவரு மேத்தருந் தகைத்தாம்
சொற்பெரி யாரைத் துணைக்கொளென் றறைந்த
செகத்திற் புகழ்பெறு ஜெகநாத நாயடு
அருஞ்சொன் னோக்கிற் கருஞ்சொல் லாகும்
பொன்மார் பணனிகர் போன்மார் நடேசவேள்
அறிவுரை யார்க்கு மவாக்கொளுந் தகைத்தே
திருப்புளி சாமியின் கருப்புளி தணக்கும்
வாய்மைத னருமை வழுத்துதற் கரிதே
விடற்கரி தென்னு முடலோம் புவதுட
னொல்காச் சீருடைத் தொல்காப் பியத்தின்
அரும்பிர சங்கங் கரும்பினின் மேலாக்
கலியாண சுந்தரர் காரெனப் பொழிந்தது
எம்மனோ ரவரு மெளிதிற் றெளியவே
கண்ணுத லுகந்தரு ளெண்ணரு மூவரின்
பாவா ரமதாந் தேவார நுட்பம்
எடுத்துக் காட்டிய வெழில்பெறு சதாசிவ
சேட்டியார் மொழிகள் கெட்டிநன் மணியாம்
தெப்பங் கல்லெனு மப்பர் பெயராம்
ஒருநா வொன்றாத் திருநாவுக் கரசு
தமிழ்ப்பிர சங்கந் தமிழ்ப்பிர சம்மே
அடக்க முடைமை முடக்கின் றுரைத்தார்
வடிவேல் பெயர்கொளுங் கடிதலின் மொழியார்
குமார னெனவளர் குமார சாமியின்
நன்னட் புரையை யென்னட் புடையரும்

அகமதிற் கொள்ளிற் பவமதி னேரார்
வாக்கினின் மேம்படு சேக்கிழா ரென்னும்
பெரியார் காதை பிரியார் கொளவே
சீரென வுரைத்தார் நீரமை சோம
சுந்தர ரென்னுந் தந்திர மிக்கோர்
சிங்கார முடனுரை பங்காரு பத்தரின்
அரும்பெருஞ் செல்வப் பெரும்பேற் றுரைகள்
கற்கண் டதனினுங் கனியினு மினியவே
முக்கனி யெனமொழி முத்தைய முதலியார்
முன்னுக்கு வருவதை முன்னுரை கொண்டுரை
பெருந்தகை சொல்லிற் கருந்தகை யாகும்
ஊழ்வலி சீவ னுயர்சுதந் தரமும்
விச்சையின் மிக்க சச்சிதா னந்தம்
பிள்ளை மொழிந்தார் கிள்ளை மொழியென
இத்தகைப் புலவரு மிவர்பொரு பெரியரும்
என்று முடன்சேர்ந் தெல்லென விளங்கக்
கலைமகள் கழகம் கலையென வளர
வெள்ளிதழ்த் தாமரை விளங்கும்
அருளுடைக் கலைமக ளருள்செய் குகவே.

T. L. திருஞானசம்பந்தன்,

திருவாவடுதுறை ஆதீனம்.

பால சிக்ஷை.

4-வது 5-வது வயது.

அறிவுப் பயிற்சி.

(வெண்டாமரை ௩, 77-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஞாபக சக்தி.

நாம் அறியும் விஷயங்களை மனதில் பதியவைத்து, வேண்டும் போது அவைகளை நமக்கு நினைப்பூட்டும் மனோசக்திக்கு ஞாபகம் என்று பெயர்.

ஞாபகம் அறிவுப் பயிற்சிக்கு இன்றியமையாத தென்பதைப் பற்றிப் பலபல சொல்லவேண்டுவ தவசியமின்று. ஞாபகத்தின் சகாய மின்றி அறிவை விருத்தி செய்தல் அசாத்தியம். கற்கும் ஒவ்வொரு விஷயமும் கற்ற மறுக்ஷணத்திலேயே மனதினின்றும் மறைந்துபோய் விடின், அறிவை வளர்ப்பது எங்ஙனம்? இல்லிக் குடத்திட்ட நீர்போல, மனதில் ஒன்றும் நில்லா தொழியுமன்றோ?

குழந்தைகளிடத்தில், பிறந்த சில வாரங்களிலேயே சிற்சில விஷயங்களில் ஞாபக சக்தி வெளியாகின்றது. நாய், பூனை, குதிரை, யானை, புறு, மாடு முதலிய ஜீவ செந்துக்களிடத்திலும் ரூபம், குரல், இடம் சம்பந்தமாக ஞாபக மிருப்பதை நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம். ஆனால், இத்தகைய இயற்கை ஞாபகம் அறிவு விருத்திக்கு நேராகச் சம்பந்தமானதன்று. அறிவு வளர்ச்சிக்குச் சம்பந்தமான ஞாபகம் இரண்டொரு வயது ஆனபின், குழந்தை பேச ஆரம்பிக்கும்போதுதான் உண்டாகின்றது. இரண்டு மூன்று வயதினின்று எழெட்டு வயது வரையில், குழந்தைகளிடத்தில் அபாரமான ஞாபக சக்தியுண்டு. ஒரு பாஷையின் ஆயிரக்கணக்கான பதங்களையும், அப் பதங்களை உபயோகிக்கின்ற பலபல முறைகளையும் மனனப்படுத்திக்கொண்டு அந்தப் பாஷையில் எளிதாக அவர்கள் பேசுவதே அவர்களது ஞாபக சக்திக்குப் பெரிய சான்றாகும். மலர்ந்த அறிவுள்ள வயது வந்த பெரியவர்கள் இவ்வளவு குறுகிய காலத்தில் குழந்தைகளைப்போல ஒரு பாஷையில் விருத்தியடைவது அரிது. தலை மூளையின் மேடுபள்ளமான சுருச்சரைகளே ஞாபகத்திற்கு இருப்பிடமென்பர் மனோதத்துவ நூல் வல்லோர். மூளையின் மேற்பாகம் சிறு வயதில் அதிக மேடுபள்ளமா யிருப்பதையும்; வயது முதிர முதிர அம் மேடு பள்ளங்கள் சமப்பட்டு வருவதையும் கண்கூடாகக் காண்கின்றனர் உடல்நூற் புலவர். அன்றியும், ஞாபகத்திற்கு இருப்பிடமாயிருக்கும் மூளை குழந்தைகளிடத்தில் சிறிதும் பதிதலில்லாத வெள்ளைக் காகிதம் போல இருக்கின்றது. அதில் எதைப் பதிப்பினும் சுலபமாகப் பதியும். வயது வந்தவர்களிடத்திலோ, எற்கனவே ஞாபகமென்னும் பதிவுக் கோலால் பலபல விஷயங்களும் பதியப்பெற்று இடம் குறுகியகாகிதத்தை யொத்திருக்கிறது. அதில் புதிய புதிய விஷயங்களைப் பதித்தல் சுலபமன்று. இன்னும், வயது முதிர்ந்தவர்கள் மனது இயல்பாகவே ஒரே விஷயத்தில் நிலைபெறாது பல இதர விஷயங்களில் செல்லும் தன்மையுள்ளதனால் ஞாபக சக்தி குறைதற்கு இடமாகின்றது. இக் காரணங்களைப்பற்றியே எத்தேயத்தும் எக்காலத்தும் குழந்தைப் பருவத்திலேயே ஞாபக சக்தியை விருத்திசெய்து வருகின்றனர். ஐந்து ஆறு வயதுள்ள

குழந்தைகள் பாடசாலைகளில் தாங்கள் வாசிக்கும் புத்தக முழுதுமேகூட ஒன்றும் விடாமல் சுலபமாக மனனப்படுத்திக்கொள்வதைக் காண்கின்றோம்.

ஞாபக சக்தியைச் சரிவரப் பயிற்றுவதற்குச் சாதகமான உபாயங்களை அறிதலும் அவசியம்.

மனதில் ஒரு விஷயம் ஊன்றி நிற்பதற்கு, பயம், ஆச்சரியம், விருப்பு, வெறுப்பு முதலிய மனவெழுச்சிகள் பெரிதும் சாதகமாகும். உதாரணமாக, அழுத்தமான ஒரு உணர்ச்சி யேற்பட்டபோது, "இதை எக்காலமும் மறவேன்" என்று சொல்வது உலக வழக்காக இருக்கின்றது. இன்னம் ஒரு விஷயம் நமது மனதில் நிலைபெறுவதற்கு, அதை நம்முடைய புத்தி தெளிவாய்க் கிரகிக்கவேண்டும். தெளிவற்ற விஷயம் வெகு சுலபமாக மனதினின்று அகன்றுவிடும். பின்னும் பின்னும் அறிந்த விஷயத்தை ஞாபகப்படுத்திக்கொண்டே வருதல் அவ் விஷயம் மனதில் வேரூன்றி நிற்பதற்கு இலாபகரமானது. பல நூல்களையும் மனப்பாடம் செய்திருப்பினும் அவற்றை மீண்டு மீண்டும் மனனப் படுத்திக்கொள்ளாதுவிடில் அவைகள் ஞாபகத்தினின்று நீங்கிவிடும். சரியான முறைப்படி விஷயங்களை ஞாபகப்படுத்திக்கொள்ளுதல், அவைகள் மனிதினின்று நீங்காமல் நிற்பதற்கு ஏதுவாகும். ஒரு விஷயத்தை மனதில் நிறுத்திக்கொள்வதற்கு அது ஞாபகத்திற்கு வரக்கூடிய சந்தர்ப்பங்களெல்லாம் உதவியாயிருக்கின்றன. அவ் விஷயமே ஞாபகத்திற்கு வாராதபோது அதை நினைப்பூட்டுதற்கு, அச் சந்தர்ப்பங்களில் ஒன்று போதியதாகும். நமது முன்னோர்கள் சாத்திரங்களையெல்லாம் செய்யுள் வடிவமா யமைத்து வைத்தது, விஷயங்கள் ஞாபகத்திலிருந்து நீங்காமல் நிற்பதற்கென்றே. மோனை, எதுகை முதலிய செய்யு ளுறுப்புகள், ஞாபகத்திற்கு உடனே வாராத சொற்களையும் அடிகளையும் நமக்குச் சுலபத்தில் நினைப்பூட்டுகின்றன.

நல்ல ஞாபகத்திற்கு மூன்று குணங்கள் இருத்தல் அவசியமென்பர் உள நூற் புலவர்.

1-வது, விரைவில் விஷயங்களை மனனம் செய்யும் சக்தி. இது எல்லோரிடத்திலும் ஒரே அளவில் அமைந்திருப்பதில்லை யென்பது அனுபவ வுறுதி. வில்மேன் (Villemain) என்னும் பிரெஞ்சுப் பண்டிதர், ஒருவர் செய்யும் பிரசங்கத்தை அது எவ்வளவு நீண்டதாயினும் ஒருதரம் கேட்டால் பின்பு அதை யப்படியே எடுத்துச் சொல்லும்படியான ஞாபக சக்தியை யுடையவராயிருந்தார். ஓவியப் புலவர்களிற் சிலர், ஒருவரை

ஒருதரம் பார்த்திருப்பினும், அவருருவத்தைச் சிறிதும் வழுவாமல் எழுதக் கூடிய சக்தியுடையவராயிருந்தனர். நம் தேயத்திலும் அவதானப் புலவர்களது அபார ஞாபக சக்தியை நேரிற் கண்டு வருகின்றோம். குழந்தைகளிடத்தில் ஞாபக சக்தியை விருத்தி செய்வதற்கு அவர்கள் கவனத்தை இழுக்கக்கூடிய முறைகளை உபயோகித்தும், ஞாபகத்திற்கு அளவுக்கு மிஞ்சிய சுமையைக் கொடுத்துச் சலிப்புண்டாக்காமலும், அவர்கள் ஞாபக சக்தியின்மீது தன்னம்பிக்கை யுண்டாகுமாறு செய்தும்வரின், விரைவில் மனனப்படுத்தும் சக்தி வளர்ந்துவரும்.

2-வது, மனனப்படுத்தியவைகளை இழந்துவிடாமல் பாதுகாப்பது. கற்றவை மனதில் நிற்பதற்கு அடிக்கடி அவைகளைப் பயிற்சி பண்ணிக் கொண்டுவருவது அவசியம். ஒருதரம் அடித்த ஆணியைப் பலதரமும் அடித்தாலன்றோ அது நன்றாக அழுந்தி நிற்கும்.

3-வது, ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கும் விஷயங்களை வேண்டிய சமயத்திற்கு உடனே நினைவில் வருவித்துக்கொள்ளும் சக்தி. இக்குணம் அமையாத ஞாபக சக்தியினால் ஒருவர் எவ்வளவு விஷயங்களை மனனப்படுத்திக்கொண்டிருப்பினும் பிரயோஜனமில்லை. இந்த விசேஷ குணம் ஞாபகத்தி லமைவதற்கு மனனப்படுத்திக்கொண்டவைகளைக் கேட்டவுடனே சொல்லவும், பலவாறாகவும், முன்பின்னுள்ள முறையை மாற்றியும், குழந்தைகளைச் சிறுபிராயத்தினின்றே பழக்கிவரவேண்டும்.

சுருங்கச் சொல்லின், ஞாபக சக்தியானது அறிவையூட்டி வளர்க்கும் செவிலித்தாய் போன்றமையின், அதைச் சிசுப் பிராயத்தினின்றே மனன விதிப்படி பயிற்றிவருதல் அத்தியாவசிகமாகும்.

(தொடரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

தருணீமணி.

புதியதோர் நவீனகம்.

அத்தியாயம் 1.

சேற்றிற் புதைந்த மாணிக்கம்.

நடு நிசி நேரம். ஓர் இளம்பிறைச் சந்திரன் தன் ஒளி யொழிந்து, முகம் நாணி, ஓர் புறம் ஒதுங்கி நின்றனன். தாரா கணங்களும் தம் நடு

நாயகன்றன் வீழ்ச்சியைக் கண்ணுற்றுத் தத்தம் தலைகளை மறைத்துக் ககனத்தே வாளாவிருந்தன. ஆ! என்ன நன்றி! என்ன விசுவாசம்! சந்திரன் தன் கலைகள் நிரம்பப்பெற்றுச் சுகித்திருக்குங்கால், தோழமை பூண்டு உடன் பிரகாசித் துலவிய நக்ஷத்திரங்கள், தம் தோழன் கஷ்டதசையை யடைந்ததும் கைசோரவிட்ட இந்நட்பு எத்தகைத்து! ஆகலினன்றோ அமிழ்தினு மினிய தமிழ்மொழி யம்மை ஔவையும்,

"...................கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் — இல்லானை
இல்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்"

என்றருளியுள்ளார்.

நிற்க, நாம் மேற்சொல்லிய நடு நிசி நேரத்து மணிபுரத்தின் ஓர் பாங்குள்ள குடிசைகள் அடர்ந்த ஓர் சிறு வீதியினூடே, தீவிர கதியுடன் சென்றனர் இருவர்.

"பிரபுவே! நம் நண்பரைக் காணோம் —" என்றா னொருவன்.

"திருடன் ஓடியிருப்பான். நம்மிட மச்செய்தி சொல்லப் பயந்து பின் தங்கினர்போலும்" என்றான் மற்றவன்.

அதே சமயத்து, ஆங்கிருந்ததோர் குடிசைகளுள் ஒன்றிலிருந்து ஓர் அவயக் குரல் ஆழ்ந்தொலித்தது.

"ஏ சின்னசாமி! என்ன வது! அபயக் குரல் ஒன்று இவ் வகாலத்தில் எங்ஙனே ஒலிக்கின்றது! அடுத்து ரக்ஷித்தல் ஆன்றோர் குணம் என்பர் அறிந்தோர். நம் பெரியோரும் "சுவர்க்காதி போகங்களைப் பயக்கத்தக்க கோதானம், பூதானம், அன்னதானம் முதலியவைகளை விட அடுத்து வந்தவர்க்கு அபயங்கொடுத்து இரக்ஷித்தலே மிக்க பயன் றாத் தக்கது" என்று கூறியிருக்கிறாரே!" என்றான் சுகுமாரனென்னும் பிரபு.

"சுவாமி! உண்மையே! ஆனால், சமாசாரம் இன்னதென்று அறியுமுன் வீட்டினுள் நுழையலாகாது" என்றான் உடன்வந்த தலையாரி.

உடனே "கொலை! கொலை!! காப்பாற்றுபவ ரில்லையா?" என்னும் சப்தங்கள் மீட்டும் மீட்டும் ஒலித்தன.

சுகுமாரன் திடுக்கிட்டான். "தேவநாயகம் வேலைத் திறம் சாமி!" என்று சொல்லிச் சிரிக்கலாயினன் சின்னசாமி.

ஓர் பெண்ணின் உருவம் வெளிவந்து அரற்றியது. மீட்டும் மற்ருெரு உருவம் வெளிவந்து அப்பெண்ணுருவத்தைப் பிடரியிற்புடைத்து வீட்டினுள்ளே யிழுத்துச் சென்றது. இருவரும் குடிசையின் உள்ளே புகுந்தனர். "நயினு — தருணியை — கொலைசெய்கிருர்! கொலை!" என்று சொல்லி, இவர்களை எதிர்கொண்டுவந்தது மற்ருெரு உருவம்.

"ஏ! கூனு! என்ன சமாசாரம்? —" என்ருன் சின்னசாமி.

"சமாசாரமா? நயினு தருணியைக் கொல்கிருர் — உள்ளே —" என்று அரற்றலாயினன் அக் கூனன்.

உள்ளிருந்து "தொப்பு! தொப்பு!" என்று சப்தம் கேட்டது. நம் நண்ப ரிருவரும் கூனனைப் பின்தொடர்ந்து உட்புகுந்தனர்.

இவர்கள் புகுந்த அறையைச் சற்று இங்கே விஸ்தரிப்பாம். நாற்புறமும் மட்சுவர். மேலோ கூரையாலாய விதானம்.

உத்திரத்திலிருந்து ஓர் மானிட வுருவம் கீழ் தொங்கியது. அவ்வுருவம் காற்சட்டை, உரை, அங்கி முதலிய யாவு மணிந்து, ஓர் தாம்புக் கயிற்றினுற் கட்டப்பட்டிருந்தது. முகத்தில் அணிவித்திருந்த மூடு குல்லா அவ் வுருவத்தினை முன்னிலும் விகாரப்படுத்தி, பார்ப்போர்க்குப் பன்மடங்கு பீதியைப் பயந்தது. கைகளிரண்டும் பின்னுற் பிணைக்கப்பட்டிருந்தன. இதைப் பார்த்ததும் சுகுமாரன் திகிலுற்ருன் எனினும், சீக்கிரத்தில் இது ஓர் செயற்கை உருவமே யன்றி வேறல்ல வென்றறிந்து, தன் கோழைத்தனத்தைக் கண்டு தானே வியந்தனன்.

சுவரின்மீதிருந்த சித்திரங்களோ பின்னும் விசித்திரம்! சுண்ணும்பு பூசிய சுவரின்மீது, காவிக் கட்டி ஒன்றினுல் அநேக ரூபங்கள் வரையப்பெற்றிருந்தன. ஓர் புறம் ஓர் தூக்குண்ட மனிதனும், ஓர் புறம் கொலைக்களம் ஒன்றும், மற்ருேர்புறம் கொள்ளைக்காரர்களின் கொலை முதலிய செயல்களும், இவ்வாருன விசித்திரப் படங்கள் விளக்கு வெளிச்சத்தில் பின்னும் விகாரமாக விளங்கின. பின்னும் கரித்துண்டுகளால் வரையப்பெற்ற கயவரின் களவு, கொலை, கொலைக்களம், இராவணன் வதம், கஞ்சன் வதம், இரணியாட்சன் வதம் முதலிய படங்கள் பல பொலிந்து நின்றன. பின்னும், பேய்களும், பிசாசங்களும், பூதங்களும், அருவங்களும், மற்றும் பீதி விளைக்கத்தக்க உருவங்களும், பத்துத் தலைப் பிசாசங்களும், நான்முக நாகர்களும், ஒற்றைக்கண் ஒற்றர்களும், "ஆ" வென்று வாய்திறந்து வருவார் போவாரை விழுங்குவனபோற் ருேன்றின.

உள்ளிருப்பவரைச் சற்றுக் கவனிப்போம். நம் நண்பரை யெதிர்கொண் டழைத்த கூனன், பார்த்தற்கு மிக்க விகாரமாய்த் தோற்றினன் எனினும் தன் னவயவங்கள் முற்றுஞ் சரியா யமையப்பெற்றவன். முகம் சாந்தமும், பொறுமையும் பொருந்தியிருந்தது. நீண்ட கரங்களும், துவண்ட தாள்களும் உடையவன். வயது பதினெட்டிருக்கலாம்.

சுகுமாரன் உள் நுழைந்ததும், ஓர் பெண் குரல் "ஐயா! என்னைக் காப்பாற்றும்! மாமாவை மாத்திரம் தொந்தரவு செய்யாதீர்! —" என ஓலமிட் டொலித்தது.

இவள்தான் நம் கூனன் "தருணி" யென வழைத்தவள். தருணீமணி யெனுந் திருப் பெயர் புனைந்தவள். பதினு றுட்டைப் பிராயத்தினள். பரந்த கூந்தலும், பொரிந்த முகமும், கரிந்த வுடையும் கொண்டாளெனினும் அழகு வாய்ந்தவளே. மதியை நிகர்த்த அவள்தன் சுமுகம் சற்றே மேகத்தால் மறைக்கப்பெற்ற சந்திரன் போன்று சுந்தரமாகத் திகழ்ந்து நின்றது. கறுத்த கூந்தலும், சிரித்த முகமும், பருத்த வுடலும், சிறுத்த இடையுங்கொண்ட அந் நங்கை, மலின வத்திரமே பூண்டாளெனினும், அவள்தன் பார்வையி லோர்வித கண்ணியமும், பொலிவுந் திகழ்ந்தது. அரக்கியர் குழாம் மத்தியிற் றிகழ்ந்த சீதேவியார் உருவம் போலுமே, அக் கொடியர்க் கிடையிருந்த நங் கொடியிடையாளும். வியக்கத்தக்கதேயாயினும், பங்கத்திற் பங்கஜம் பிறத்தல் சகஜமே!

அன்னவ ளருகில் எமபடன் போன்று கையிலோர் தண்டங் கொண்டு நின்றனன் மற்றொருவன். அன்னவன் தேவநாயக னென்பான். கறுத்த மேனியும், பருத்த தொந்தியும் பொருந்தி வந்தவன். மிகவும் மூர்க்கன்.

"ஐயா! கருணைகொண்டு என்னைக் காத்து ரக்ஷியும்! ஆனல் மாமாவை மாத்திரம் தொந்தரவு செய்யற்க" எனத் தீனஸ்வரத்துடன், நாத்தழுதழுக்கக் கண்ணீர் ததும்பப் பிரார்த்தித்தனள் தருணீமணி.

"தேவா! நில்! நில்! பெண்பிள்ளையென்றும் பாராத மூர்க்கா நில்! இவ் வகால வேளையில் —" என்றனன் சின்னசாமி.

"பின் எனிவள் கூனனுக்குப் பரிந்து வருகிறுள்? நானவனை யடித்தா லிவட்கென்ன?" என்று கோபத்துடன் கடுத் துரைத்தனன் தேவநாயகன்.

"மெள்ள! உன் பிள்ளையை நீ புடைப்பதிங் கியாவர்க்குந் தெரியும்! நிறுத்து உன் கதையை. உனக்கு நன்மதி போதிக்க —"

"நன்மதிதான்! நானிவர்களிட மிருந்துதான் மதி கொள்ளல் வேண்டும்! போங்களையா உங்கள் வேலையைப் பார்த்து! — நானிறந்த பின் யார் பார்ப்பதென் வேலையை? வேலையைக் கற்றுக்கொண்டா லல்லவோ பின்னர்ப் பிழைக்கலாகும். நானப்புறம்போனுல், இவனு மிந்தச் சிறுமியுமாக ஏதேதோ படிக்க வாரம்பிக்கிறார்கள். படிப்பாம்! அடுப்பங் கரைச் சிறுமிக்குப் படிப் பெதற்கு? இவர்கள் படித்தது போதும்! படிப்புத்தான் பெரியோரைப் பழிக்கப் போதிக்கின்றதோ? காற்படிப்பு, அரைக்காற் படிப்பெல்லா மிப்படித்தான்! —" என்று பிரசங்கிக்கலாயி னான் தேவநாயகன்.

"சரிதான் தேவா! நீ அந்தப் பெண்பிள்ளையைப் புடைக்காதே! இனிமேலிங் கரவம் கேட்குமாயின் உன்னை யக்கணமே காராக் கிருகத் திற் கிழுத்துச் செல்வேன்" என்றான் தலையாரி சின்னசாமி.

"சரி! என் பிள்ளையை யான் புடைக்காதென்ன? உன்னை யார் கேட்டது? —" எனக் கடுத்துரைத்தனன் மற்றோன்.

"சரி" என வெளிப் போந்தனன் சின்னசாமி சுகுமாரனுடன்.

"நாம் இப் பெண்பாலைத் தனியே விடலாகாது. அவன் ஏதே னும் செய்யக்கூடும்" என்றனன் சுகுமாரன்.

"அவள் தன் மருமகள் என்றல்லவோ சொல்கிறான்?" என்றான் தலையாரி.

"நிச்சயமாகத் தெரியாதோ? —"

"ம் — ம் — பார்வைக்கு அப்படித்தான். —"

"அவன் — தேவனு? — அவன் யார்?" என்று வினவினான் நம் கதாநாயகன்.

"இவ்வூர்க் கொலையாளி சுவாமி" என்றான் சின்னசாமி.

இதைக் கேட்டதும் "ஆ" வென்று திடுக்கிட்டனன் சுகுமாரன்.

"நீங்க ளென்ன ஆச்சரியப்படுகின்றீர்களே! பின் வேறு எங்கே இவ்விடத்திருந்த படங்களும் உருவமும் காணக்கூடும்?" என்றனன் சின்னசாமி.

"ஏதாவது காலப்போக்கு நிமித்தம் வரைந்த படங்களென்றும், இம் மாதிரி பயங்கரமான படங்கள் போடுவதில் பிரீதி கொண்டவ னொருவன் அங்கிருக்கக் கூடுமென்றும் அல்லவோ நினைத்தேன். கொலை யாளி வீட்டினுள் காலடிவைக்க நேருமென்று நான் கனவிலும் நினைத் தவனல்லவே! —" என்றான் சுகுமாரன்.

"அவன் பிள்ளை — சுவாமி —"

"பாபம்! மிகவும் கஷ்டப்படப் பிறந்தவன். அவன் பெயரென்ன தெரியுமா? —"

"கூனன் என்றுதான் நாங்கள் கூப்பிடுவது வழக்கம். தேவன் தன் பிள்ளையைத் தன் வேலையில் தேர்ச்சிபெறச் செய்து, தன் தொழிலில் நியமிக்கவேண்டுமென்று அவாக்கொண்டிருக்கிறான். தருணியின் போதனையால் கூனன் அதற்கு உடன்படமாட்டேனென்கிறான் —"

"தனக்குப் பிடிக்காத வேலையில் எனவனைத் தள்ள —"

"வேறு என்ன சுவாமி செய்ய? பன்றிக்குட்டி ஆகாயத்திற் பறக்க முடியுமா? அல்லது கோழிக்குஞ்சுதான் கிணற்றில் வசிக்க முடியுமா? மீன்கள் தரையில் நீச்சலடிக்குமா? அவை யவை தம் ஜாதித் தொழிலையே செய்கின்றன. அவ்வாறே எவரெவர் எத்தொழிலைச் செய்ய வேண்டுமோ அவரவர் அத்தொழிலையே செய்யவேண்டும். அதற்குத் தான் வருணம் ஏற்பட்டது. அவசியம் பிதுராசாரம் என்பது சித்தாந்த மல்லவா? கொலையாளியின் பிள்ளை வேறெதற் குதவுவான்? யார்தான் அவனுக்கு வேலைகொடுப்பார்கள்? இப்பொழுதே அவன் குடிசைப் புறம் யாரும் போவதில்லை —"

"ஏன் — ?"

"சுவாமி! இங்கிருக்கும் ஜனங்க ளிரண்டுவிதம். ஏழைகள். நல்லவரும், துஷ்டரும். நல்லவர்கள் கொலையென்பதைக் கண்டு பயப்பட்டவர்கள். துஷ்டர்கள் மரியாதை யற்றவர்கள் — சுவாமி — தருணி தான் கடைக்குப் போவது வழக்கம். யாரும் அவளை இலட்சியம் பண்ணுவதில்லை —"

"அவள் யார்? —"

"தேவன் அவளைத் தன் மருமகள் என்றே யழைக்கிறான். எனக்கு அந்தச் சமாசாரம் ஒன்றுமே தெரியாது. ஆனால் இப்படிப்பட்ட ஜனங்களுக்கு இப்படியு மோர் பந்துஜன மிருக்குமோ என்பது சந்தேகந் தான். —"

"அவளுக்குத் தாய் தந்தையர்? —"

"அவர்க ளிறந்துவிட்டார்கள் சுவாமி! அவள் ஒரு அநாதைக் குழந்தை. தேவனுக்குப் போது போகாதிருந்தால் எங்களோடு வந்து பேசிக்கொண்டிருப்பான். ஒரு நாள் அவன் அந்தப் பெண்ணின் பெற்றோர் இறந்துவிட்டதால் தருணியைத் தான் வளர்க்க நேர்ந்தது என்று

106

சொன்னான். குழந்தையாயிருந்தபோது அவன் தருணியை மிக வாஞ்சையோடு வளர்த்து வந்தான். அவள் அப்போழ்து இங்கு அருகாமையிலிருந்த சிறு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தாள். சோமதத்தரும் மிகப் பிரீதியுடனேயே படிப்பித்து வந்தார். தையல் தைத்து அதினின்றும் வந்த பணத்திலிருந்து புத்தகங்கள் கிரயத்திற்கு வாங்கிப் படித்துவந்திருக்கிறாள் —"

"யார் இவளை வேலைக்கு வைத்துக்கொள்பவர்? —"

"சோமதத்தர் வீட்டிற்கு இவள்தான் துணிமணிகள் தைத்துக் கொடுத்தல் வழக்கம். அவள் நிரம்பப் புத்திசாலி. கூனனுக்கும் படிக்கக் கற்றுக்கொடுத்திருக்கிறாள் —"

"சின்னசாமி! இவளைப்பற்றி நீ பேசுவதிலிருந்து நீ மிகவும் நல்லவனென்று அறிந்துகொண்டேன். அவள்மீதும் எனக்கேதோ ஒருவித பிரீதி யுண்டாயிருக்கிறது. தேவனிடமிருந்து அவளை எப்படியாவது பிரித்துவிடவேண்டும். எந்தவிதத்திலாவது? —" என வினவலாயினன் சுகுமாரன்.

"சுவாமி! ஏதாவது சிலருக்குப் பள்ளிக்கூடம் வைத்துப் படிப்புக் கற்றுக்கொடுக்கலாமென்கிற அவா அவளுக்குண்டு. ஆனால் அவள் தேவனை விட்டுப் பிரியச் சம்மதியாள்.—ஒரு நாள் தேவனிடமிருந்துண்ணத் தனக்குப் பிடிக்கவில்லையென்றும், தானாக வுழைத்துப் பிழைக்க வேண்டுமென்றும், ஆனால் தன்னை யொருவரும் வேலைக்கு வைத்துக் கொள்ளமாட்டார்களென்றும் சொல்லி யழுதாள் — சுவாமி. எனக்கங்கு நடப்பதெல்லாந் தெரியும். எனக்கு நியமமான வேலை யிந்தப் பக்கந்தான். யாராவது சுரமாய் அல்லது தலைவலியாய் இருந்தால் உடனே தருணி தன் கையிலிருந்து பணம்போட்டு மருந்துகள் வாங்கி யனுப்புவாள். சில சமயம், தின்பண்டங்கள், பால், பழம் முதலியன எங்கிருந்தோ வரும். இந்த மாதிரி தருணி தன்னை மாத்திரம் வெளிக் காட்டிக்கொள்ளாமல் பரோபகாரம் புரிந்து வருகிறாள் —"

சுகுமாரன் ஆச்சரியமுற்றான். சுகுமாரன் பரோபகார சங்கம் முதலிய நற் சங்கங்களின் தாபிதன். ஆகவே, மேன்மேலும் தருணீமணியிடம் பிரீதிகொண்டான்.

"கொலையாளி வீட்டுப் பெண்! — சேற்றிற் புதைந்த மாணிக்கம்போ லல்லவோ இருக்கிறது" எனப் புகழ்ந்தனன் சுகுமாரன் ஆனந்த பரவசனாய்.

பின்னும், சின்னசாமியைத் தன்னருகிற் கூப்பிட்டு "என் பெயர் சுகுமாரன் என்பது. மங்களவிலாசத்தில் வசிக்கிறேன். திருடனைப் பற்றி ஏதாவது சமாசார மகப்பட்டால் எனக் கடிக்கடி தெரிவித்துக் கொண்டிரு —" என்று கூறி, தன் னரைக் கச்சையிலிருந்து சில தங்க நாணயங்களை யவனுக்குப் பரிசா யளித்துவிடுத்தனன்.

தலையாரி சின்னசாமியும் "சுவாமி — எப்பொழுதாவது எளியேனுகிய என் உதவி வேண்டியிருந்தால் தலையாரி சின்னசாமி உதவி செய்யத் தயார் என் றறியுங்கள்" என்ருன்.

இருவரும் பிரிந்தனர்.

(தொடரும்.)

R. வாசுதேவ சர்மா.

கல்வியினுல் அடையும் நாகரிகமும், கல்லாமையால் அடையும் துன்பமும்.

(இருவர் சம்பாஷணை.)

ராதா: — லலிதா! க்ஷேமந்தானு? உன்னை அடிக்கடி சந்திப்பது மிகவும் கடினமாக இருக்கிறது.

லலிதா: — க்ஷேமமாகவே யிருக்கிறேன்; எனக்கு இப்பொழுது அதிக் சாவகாசம் கிடையாது. அதனுல் அடிக்கடி உன்னைச் சந்திக்க முடியவில்லை. உன் உடம்பிற்கென்ன, நோயாளியாய்க் காணப்படுகின்ருயே?

ராதா: — எனக்கு உடம்பு அசௌக்கியம். உனக்கு என் சாவகாசமில்லை?

லலிதா: — ராதா! நான் காலை மாலை பாடசாலைக்குப் போய் வரவும், வீட்டில் மற்றநேரம் சங்கீதம் கற்றுக்கொள்ளவும், பின்னல் வேலைகள் செய்யவும், வாசிக்கவும் நேரம் சரியாக இருக்கின்றது.

ராதா: — உனக்கு 16 வயதாகியும் நீ இன்னும் வாசிக்கிருய், நீ யென்ன உத்தியோகம் செய்யப்போகிருயோ?

லலிதா: — உத்தியோகம் செய்வதற்காகத்தான் பெண்கள் வாசிக்கவேண்டுமோ? உத்தியோகம் செய்யாவிடினும் வாசிப்பது எல்லாவற்றிற்கும் நன்மையன்ருே?

ராதா :— நாம் எவ்வளவுதான் வாசித்தபோதிலும் விவாகமான பின் அதனுல் என்ன பயன்? கணவன் முதலானவர்களுக்குப் பணி விடை செய்தலும், குடும்ப கவனமுமே நமக்குச் சரியாக விருக்கும் பொழுது கல்வியை உபயோகிக்க நேரம் இருப்பது கடினமன்றோ?

லலிதா :— என்ன! நீ சொல்வது மடமையாக இருக்கிறது! கல்வியினுல் உண்டாகும் பயன் இன்னதென்று நீ அறிந்துகொள்ளவில்லை போலும்!

ராதா :— ஆம், என் தாய்தந்தையர்கள் எனக்குச் சொற்ப கல்வியே போதிக்கச் செய்தார்கள். அதிகம் வாசித்தால் அநேக கெடுதிகள் உண்டாகுமென்று கூறியவற்றை மாத்திரம் உணர்ந்தேனே யன்றிக் கல்வியினுல் உண்டாகும் பயன் இன்னதென்று உணர்ந்துகொள்ள வில்லை.

லலிதா:— நான் கூறுவதைக் கவனமுடன் கேள். அதாவது நமது சரீரத்திற்கு ஆகாரம் எப்படியோ அப்படியே கல்வியானது நமது அறிவுக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. நாளுக்கு நாள் வளர்கின்ற சரீரத்தைக் கடவுள் நமக்குக் கொடுத்திருந்தாலும், அதற்குத் தகுந்த ஆகாரங்களைக் கொடுத்துச் சௌக்கியத்துக் கடுத்த காரியங்களையெல்லாம் நாமே தேடிக்கொள்ளாவிடில் சரீரம் வளரமாட்டாது. அப்படியே கடவுள் நம்மை ஞானுத்மாவாகச் சிருஷ்டித்திருந்தாலும நம்முடைய சுபாவ ஞானம் எவ்வளவும் போதாமலிருப்பதால், கல்வியென்னும் ஆகாரத்தைக் கொடுத்து அறிவை அபிவிருத்தி செய்யவேண்டியது நம்முடைய கடமையாயிருக்கிறது. கல்வியினுல் நாம் அடையும் நன்மைகளுக்கும் ஓர் கங்குகரை யுண்டோ? நமது அறிவை விசாலப்படுத்தும் கல்வியானது அநேக நன்மைகளை உண்டாக்குகின்றது. அதாவது அளவற்ற நூல்களை வாசிப்பதால் அரிய விஷயங்களெல்லாம் உணர்கின்றோம். நமது தேக சுகத்துக் கடுத்தவைகளெல்லாம் நாமே அறிந்து நடப்பதால் வியாதி உண்டாவதற்கு இடமில்லாமலிருக்கிறது. அரிய நூல்கள் பல ஏற்படுத்தலாம். விசித்திரமான கை வேலைகள் செய்து முடிக்கலாம். அநேகருக்கு நற்புத்திகளைப் புகட்டி நல்வழியில் பிரவேசிக்கச் செய்யலாம். சபைகளை ஏற்படுத்தி, பலர் ஒன்றுகூடி ஜனங்களை நல்வழியிற் பிரவேசிக்கும்படி பிரசங்கிக்கலாம். பெற்றோர்கள் சந்தோஷிக்கும்படி நடந்துகொள்ளலாம்.

ராதா :— என் தாய்தந்தையர்களுக்கும் எனக்குங்கூடச் சில சமயம் சச்சரவு நேர்கின்றது. அவர்கள் மனதின்படி நடந்துகொள்ளத் தெரியாமையாலன்றோ?

லலிதா :— அஃதெல்லாவற்றிற்கும் கல்லாமையே காரணம். கல்விகற்ற பெண்கள் தங்கள் கணவரிடத்தில் நடந்துகொள்ளுந் தன்மையையும் உணர்ந்துகொள்ளுகிறார்கள். அதாவது, கணவனுக்கு மந்திரியைப்போல யோசனைகள் சொல்லவும், தாயைப்போலச் சம்ரக்ஷணை செய்யவும், வைத்தியரைப்போல் தேக சுகத்துக்கடுத்த காரியங்களைத் தேடிச் செய்யவும் தெரிந்துகொள்கிறார்கள். இன்னும், சங்கீத வித்வான்கள்போல இன்பமான பதங்களைப் பாடியும், இன்பமான வார்த்தைகளைப் பேசியும் கணவனுடைய வருத்தங்களைத் தீர்ப்பார்கள், நேசரைப்போல் ஆபத்துக்கு உதவுவார்கள், காரியஸ்தர்களைப்போல் கிருக கிருத்தியங்களை நடத்திக்கொள்வார்கள், குடும்பத்தைச் சார்ந்த கணக்குகளைப் பார்த்துக்கொள்வார்கள், பந்துக்களை உபசரிப்பார்கள், குடும்பத்தில் யாவர்க்கும் திருப்தி உண்டாகும்படி நடந்துகொள்ளுவார்கள். பிறக்கும் குழந்தைகளுக்கு வியாதிகள் அணுகவொட்டாமல் சுகத்திற்கு உரியவைகளை அனுஷ்டித்துப் பாதுகாத்து வருவதுடன் அவைகளைப் பராமரிக்குந் தன்மையை உணர்ந்து, சிறுவயது முதல் அறிவுப் பயிற்சிசெய்து கல்வியையும் போதிக்கச் சக்தி உடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, கல்லாமல் இவ்வளவு நன்மைகளையும் நாம் அடைவது எங்ஙனம்?

ராதா :— கல்வியினால் அடையும் நன்மைகளை அறிந்த பிறகு எனக்கு அவமானத்தை உண்டுபண்ணுகிறது. என் தாய்தந்தையர் எனக்குக் கல்வி கற்பிக்காமையாலன்றோ மேற்சொல்லிய நன்மைகளை அடைய ஏதுவில்லாமலிருக்கிறது. இதன்றி, ருதுவான பெண்கள் வீட்டைவிட்டு வெளியில் செல்லவேகூடாதென்ற நிபந்தனையைக் கைக்கொண்டிருக்கிறார்கள். இது என்ன கஷ்டம்!

லலிதா :— கல்வி யறிவில்லாதவர்கள்தான் இந் நாகரிகமற்ற வழக்கங்களை வகித்துவருகிறார்கள். கல்வியிற் சிறந்தவர்கள் அநேகமாய் இவ் வழக்கங்களை நிராகரித்து நாகரிகத்தை வகித்துவிட்டார்கள். ஆனதால் நான் ருதுவாகியும் காலை மாலை பாடசாலைக்குப் போவதுடன் எனது தாய்தந்தையருடன் மாலையில் நல்ல காற்றிற்காகவும் தேக சௌக்கியத்திற்காகவும் கடற்கரைக்குச் செல்லுவேன், பந்துக்கள் இருக்கும் அன்னிய தேசங்களுக்கும் சென்று வருவேன், பிரசங்கங்களுக்கும் செல்லுவேன். ஆனால் ஒன்று. எவ்விடத்திற்குச் சென்றபோதிலும் தக்க துணையுடன் செல்லவேண்டுமென்பதை மறக்கமாட்டேன்.

ராதா :— ஐயோ! எனக்கு நல்ல கல்வியில்லாமையால் ஒவ்வொன்றும் துன்பமாகவே அனுபவிக்கிறேன். அன்னியர்கள் வரும்படியான இடத்தில் இருக்கக்கூடாதென்றும், அன்னியர்கள் கண்களில் கூடத்

தோற்றக்கூடாதென்றும் சொல்வதால், எந்த நேரமும் சமையலிடத்தி லேயே பொழுது போக்கவேண்டியதா யிருக்கிறது. வேலையில்லாத நேரங்களில் ஏதேனும் எடுத்து வாசிப்போமென்றால், எழுத்துக் கூட்டி இரண்டொரு வார்த்தை வாசிப்பதற்குள் பொழுது சென்றுவிடுகின்றது. இல்லாவிடில் அயல் வீட்டுப் பெண்களைக் கூட்டிக்கொண்டு வீண் வார்த் தையாடுவதால் சில சமயம் சச்சரவு நேர்கின்றது. தாய்தந்தையர்கள் மனதின்படி நடந்துகொள்ள அறியாமையால் ஒரு சமயம் சச்சரவு நேர் கின்றது. இதன்றி, ருதுவானது முதல் பல வியாதிகளால் பீடிக்கப் பட்டு வருகிறேன், நல்ல காற்றையும் அறியேன், வீட்டை விட்டு வெளி யில் சென்றும் அறியேன். என்னைப்போல் கடுங் காவலிலிருக்கும் பெண் களுக்கெல்லாம் இந் நாகரிகமற்ற வழக்கம் நிபந்தனையாகவே யிருக்கிறது.

லலிதா : — இது என்ன விந்தையாக விருக்கிறது! நாம் என்ன கூட்டில் அடைத்துவைத்திருக்கும் மிருகங்களா? அல்லது பக்ஷிகளா? அவைகளைக்கூடச் சற்று வெளியில்விடாமல் வைத்திருந்தால், வியாதி உண் டாகிச் சீக்கிரம் மாண்டுவிடுகின்றன. குற்றவாளிகள் சிறையிலிருப் பதுபோ லல்லவோ இருக்கின்றது. உனக்கு வியாதி உண்டான காரணத் தைச் சொல்லுகிறேன் கேள். அதாவது, நீ எந்தநேரமும் சமையலிடத்தி லேயே இருக்கிறதால் அவ்விடத்தில் உண்டாகும் புகையையும் கெட்ட ஆகாயத்தையும் சுவாசிக்கிறாய். அவை உட்சென்று ஒவ்வொரு அவயவத் தையும் கெடுக்கின்றன, நரம்புகள் சோர்வடையும், இரத்தத்தைக் கெடுத் துப் பல வியாதிகள் உண்டாவதற்கு ஏதுவாயிருக்கின்றன. புகை, கண்க ளுக்கும் கெடுதியே, பல உபத்திரவங்களும் உண்டாகும், சீக்கிரத்தில் பார்வை யற்றுப்போகும். புகை, கெட்ட ஆகாயம் இவைகளைச் சுவாசிப்ப தினாலேயே உனக்கு வியாதி உண்டாயிற்று. நல்ல ஆகாயத்தைச் சுவா சித்தால் நமக்கு வியாதி உண்டாகாது. கடற் காற்றே பரிசுத்தமானது. நீ கடற்கரைக்கு மாலையில் சென்று வந்தால் அநேக வியாதிகள் நீங்கும்.

ராதா : — ருதுவாகித் தந்தை வீட்டில் இந் நிபந்தனைக் குட்பட் டிருக்கும் பெண்கள் எவ்வளவு நிர்ப்பாக்கியத்தை யுடையவர்களா யிருக்கி றார்கள்! ஒவ்வொருவரும் தமது பெண்மணிகளுக்குக் கல்வியைப் போதித்து அவர்கள் நாகரிகத்தை வகித்துச் சுகஜீவிகளாய் உன்னத பதவி அடைந்து வாழ்ந்து வருவதையன்றோ கண்டு மகிழ்ச்சியடைய எண்ண வேண்டும். இதை விலக்கி, பெண்கள் அதிகம் கல்வி கற்பது கூடா தென்றும், ருதுவான பின் வீட்டில் சதா அடைத்துவைத்து அவர்களை வியாதியால் வருத்தித் துர்ப்பலரான பின் விவாகம் செய்துகொடுப்பது தான் நலமென்றும் எண்ணி அநேகர் வகித்திருக்கும் வழக்கம் மடமை யினாலன்றோ?

லலிதா : — ராதா! வீட்டில் அடைத்துவைத்திருக்கும் நாகரிக மற்ற இவ் வழக்கத்தை நீக்கினால் கற்புக்கு ஒருகால் கெடுதி உண்டாகுமோ வென்னும் கலக்கத்தினால் அநேகர் இவ் வழக்கத்தை நிராகரிக்க மனந் துணியாமலிருக்கிறார்கள்.

ராதா : — இந் நிபந்தனையினின்றும் சிலர் தீய செய்கைகளுக்கு உடன்படுவதாலன்றோ இவ் வழக்கத்தை யாவரும் நீக்குவது கடினமாக இருக்கிறது?

லலிதா : — தாய்தந்தையர்களுக்கு நம்மை இப் பருவத்தில் காப்பது முக்கிய கடமையே, நாமும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது தான் நலம், ஆயினும் வீட்டிலேயே அடைத்துவைப்பது உசிதமல்ல. பெண்கள் தம் கற்பினால் தம்மைக் காத்துக்கொள்ளும் காவலே முதன்மையானது. "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர் நிறைகாக்குங் காப்பே தலை" எனத் திருவள்ளுவ நாயனார் கூறியுள்ளார். அதாவது பெண்களைத் தலைவர்கள் சிறையினால் காக்கும் காவலால் யாதும் பயனில்லை. தமது கற்பென்னும் சிறந்த காவலில் நின்றார்களாயின் மற்றெவ்வித காவலும் பயன்படா தொழியும். பெண்களுக்கு ஆபரணமானது சிறந்த கற்பு. அதைக் காத்துக்கொள்வது தம்மாலன்றித் தாய்தந்தையர்களால் அன்று. நமது கற்புக்கு ஆதாரமானதும், அதனை நிலைநிறுத்துவதும், கற்புக்கு ஆபத்து நேருங்கால் அதைத் தடுப்பதும் கல்வியே. ஆனதால் துன்பத்திற் குட்படுத்தும் நாகரிகமற்ற வழக்கங்களை அகற்றி, ஒவ்வொருவரும் போதுமான கல்வித் திறனடைந்து நாகரிக வழக்கங்களை வகித்து வரவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

ராதா : — நமது வாழ்நாட்களில் நாகரிகமற்ற வழக்கங்களை முற்றும் நீக்கிப்போட எத்தனித்து வரவேண்டும்.

லலிதா : — ராதா! நான் போகவேண்டும், நாழிகையாயிற்று. சாவகாசமாய் இன்னொரு தினம் வருகிறேன்.

வே. மங்கையர்க்கரசி, போ. மு.

புதுவை.

திருக்குடந்தைக் காரோண வாராய்ச்சி.

அன்பர்காள்!

இக் கலைமகள் வெண்டாமரை 3, இதழ் 3-ல் "ஓர் ஐயம்" என்ற தலைப்பின்கீழும், குடந்தைவாசி யென்ற கையொப்பத்தின்மேலுங் கண்டுள்ள விடயத்தை யான் வாசித்துப் பார்த்தேன். அவ்வையப் போக்குக்கு உரியவர் சைவ நூலாராய்ச்சியில் வல்லுநர்களா யிருத்தல்வேண்டும். எனக்கு அவ்வாற்ற லில்லாததினால் யானதிகாரி யல்லனாயினும், என் சிற்றறிவுக் கெட்டியதை வெளியிடல் வேண்டுமென்ற பேரவாவானது என்னை இது விஷயத்தில் தூண்டியது. இஃதைக் கண்ணுறுங் கலைவலோர்கள் இதில் ஏதேனுந் தவறுண்டாயின் பொறுக்குமாறு வேண்டப் படுகிறார்கள்

திருக்குடந்தைக் காரோணம் என்ற தலம் எத் தலம் என்று ஆராய்வதற்கு, * திருக்குடந்தைப் புராணம் 1, திருத்தொண்டர் புராணம் 1, தேவாரம் 1, ஆகிய இம் மூன்று நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டல் வேண்டும். திருக்குடந்தைப் புராணம் காசி விசுவேசர் வரவுப்படலத்தை ஒருவாறு சுருக்கிக் கூறுகிறேன். கங்கை முதலாகக் கூறும் கன்னியர்கள் ஒன்பதுபேரும் உலகிலுள்ளார் தம்பாற் றோய்வதினாலொழித்திடும் பாப மிகுதியைச் சுமக்கலாற்றாது என்செய்வோமென்று, தண்மதி முடித்த முன்னவ னுறையுங் கைலையங்கிரியை யடைந்து எம்பெருமான் முன்னர் ஒருங்கு குழீஇனாய், எம்மை யடைந்துள்ள பாப மிகுதிக்கு ஒழிவு எவ்விதமென்று வேண்டிக்கொள்ள, வேண்டிய வேண்டியாங்கருளும் நம் பரமர் அவ் வேண்டுகோட் கிணங்கி அப் பேதையர்களைப் பார்த்து, "முன்னிய வேண்டா யாரும் மொழிபுகழ்க் கும்பகோண மன்னிய வழலோன் றிக்கில் வயங்குமத் தீர்த்தந்தன்னில் ஆண்டளப்பான் சிம்மத்துமேய மாமகநாள் மூழ்கில் விடுபடும் பாபமெல்லாம்" என்றருளினர். அருளலும், அப் பெண்கள், தவமளா மனையதானம் தவாத்தீர்த்த மிருக்குமிடந் தெரியோமென்று கழற, நம்மையன், "நீங்கள் காசியை யண்மி யிருங்கள், நாம் நும்மை யவ்விடமிருந்து அழைத்துக்கொண்டு விசுவநாதப் பெயரின் மேவி ஆங்குச் செல்வோம்; அங்கு

* வடமொழியிலும் உள்ளது. அது தமிழில் திருக்கயிலாய பரம்பரை நிகாகம சித்தாந்த சைவ சமயாசாரிய பீடமாய் விளங்காநின்ற திருவாவடுதுறை யாதீனத்து வித்வ சிரோமணியாகிய திரிசிரபுரம் ஸ்ரீமத் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை யவர்களா லியற்றப்பட்டது.

நாம் தங்குமிடத்து, நீவிருந்தங்கி எம்மை வழிபடுவதினால், எச் சுவர்க்கமும் உள்ளுவார்க்கு உதவுவிர்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினான். அப்படியே அவர்களை யழைத்துக்கொண்டு திருக்குடந்தையை யடைந்து, ஒரு குடத்தமரு மிருவருக்கரிய வொருவராகிய எம் மிறைவனின் தலம் தரிசித்துக்கொண்டு, பிறகு எம்பெருமானமரும் மற்றைத் தளிகளெல்லாந் தரிசனம் செய்துவைத்து, கடைசியில் மாமக தீர்த்த வடகரையில் "உச்சியி னங்கைகூப்பி யும்பர்க ளாவென்றார்ப்ப, மெச்சுபன் மலருந் தூவி மாதவர் விழைந்துபோற்ற, அச்சமற் றுயிர் களெல்லா மானந்த வெள்ளத் தாழப், பச்சிம முகங்கொண் டுற்றான் பராபர விசுவநாதன்." தெள்ளிய விசுவநாதன் அங்ஙன் வீற்றிருத்தல் தேர்ந்து, ஒள்ளிய சீலம் வாய்ந்த ஒன்பது கன்னிமாரும் வள்ளிய தெற்கு நோக்கி வசித்துக்கொண்டு விசுவநாதன் பூசையாற்றி மாமகநீர் தோய்ந்து உலகிலுள்ளார் தம்பாற் றோய்வதினால் ஒழித்திடும் பாப மிகுதியைப் போக்கிக்கொண்டார்கள். இதுகாறுங் கூறியவாற்றால் நம் விசுவநாதர் * நவகன்னியர்களால் பூசிக்கப்பெற்றவர் என்பது பெற்றாம். இனி அப்புராணத்துக் காரோணப் படலத்தையுஞ் சிறிது சுருக்கிக் கூறுகிறேன்.

கோசலநாட்டுக் கிறைவனாகிய தசாத புத்திர சிரேஷ்டனான இராமன், தந்தை சொற்படி வனத்திற் றிரியும்போது, இராவணன் என்னும் அரக்கர் தலைவனால் சீதையானவள் கைப்பற்றப்பட்டு இலங்கையில் சிறைசெய்யப்பட்டனள். இராமன் அச்சிறையிலிருந்து மனைவியை மீட்கவேண்டியதற்கு இராவணனைக் கொல்லவேண்டும், அத் தொழில் புரிய உருத்திரன் கூறு தன்னுடலில் இல்லாததினால், அக்கூறு பெற்றாலொழிய அவ் வரக்கனைக் கொல்லமுடியா தானபடியால், எச் சித்தியையு மருள் தென்னாட்டினை யணுகிக் காவிரி நீர்படிந்து குடந்தையுள் புக்கு, பரவு புகழ்க் கும்பப் பெருமானடி போற்றி மற்றுமுள்ள வெல்லாத் தலங்களையும் கண்ணாரக் கண்டு வாயார வாழ்த்தி மாமக நீராடி, பிறகு நம் விச்சுவநாதன்ற னடிக் கமலங்கள் பரவுவான் புக்க வளவில், ஆங்குச் சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவர் சிவலிங்க பிரதிட்டை செய்து சிவபூசை செய்வதைக் கண்ணுற்று, அம் முனிவர் திருத்தாட் கமலங்களைப் பன்முறையும் வணங்கிப் போற்றினன். அவ்வரசன் அம்முனிவரினுசிபெற்று நிற்க, அன்னவர், மன்னவர்மகனே! இங்கு நீ வந்த திறமோது

* அபிமுகமாய் எழுந்தருளியிருக்கும் காசி விசுவநாதர் கோயிலில் சுவாமி சந்நிதியில் ஒன்பது கன்னியர்களும் தெற்கு முகமாகக் கோயில் கொண்டருளியிருத்தல் யாவருக்குந் தெரிந்த விஷயம்.

கென்ன, அவ்வரசர் திலகனும், "யான் நடுங்கா அரக்கனுயிர் பின்னமுறமாட்டும் பெற்றி துணிந்தமையால், அத்தொழில்புரிய உருத்திரன் கூறு இந்த வுடலி லில்லாததினால் எத்திறத்தினாலு மது இங்கு எய்துவான் வந்தனன்" என்றான். அதற்கு அம்முனிவர் "ஏ இறையவனே! நீ சின்னாள் மாமக நீராடி விச்சுவநாதரைப் பூசிப்பாயேல், உருத்திரன் கூறுபெற்று ஓதலின் வலியனாகி முன்னிய தடைவாய்" என்றார். எனலும், அரசன் அவ்வாணை தலைமேற்கொண்டு, மாமக நீராடி, எழில் செய் வெண்ணீறு பூசி, வயங்கு கண்மணியும் பூண்டு, உள்ளத்தே யைந்தெழுத்து மெண்ணி, பெருமான் பூசை நயந்து செய்து பின் றளராதாங்குற்றுப் பெருந்தவ முயன்றான். அப் பெருந் தவத்திற்கும் பூசைக்கும் நம் பரமேசுவரர் அவ்வரசன் முன்னே பிரசன்னராய், "வேட்டது எத்தகைய வேனு மளிக்குதும் கூறுக" என்றருளினார். உடனே இராமன், தென்றல்செய் தேரினானைச் செற்றவா! காலனை யுதை காலா! தத்து மூதெயில்மூன்றுந் தழலெழ முத்துமூரல் முகிழ்த்த நிராமயா! என்று பன்முறையும் தோத்திரஞ்செய்து அடியற்ற மரம்போல் எட்டுறுப்பும் நிலத்திற் றோயப் படிந்தெழுந்து நின்று, "கன்றல்செய் யரக்கனாவி காற்றுதற் கமைந்தேனைய! அப்பெருந்திற லரக்கனைப் பொன்றுதல் செய்ய உருத்திரன் கூறு வேண்டும், அன்னதை யருள்வாய், இன்னும் அடியனேன் காயத்துள் நீர் அமைய ஆரோகணஞ் செய்தல் வேண்டும், அக் காரணத்தால் இத்தலம் காயாரோகணம் என்றும், தேவரீர் காயாரோகணநாதர் என்றும் பெயர்பெறல் வேண்டும்" என்றான். உடனே நமதய்யர், "நீ நம் சத்தி காண், நின் காயத்துள் விரவுதல் நமக்கு மிக்க வுரிமைகாண்" என்று திருவாய் மலர்ந்து, அக் கராசலங் காத்த அண்ணல் திரு உடலுக்குள் கரந்தனர். பிறகு நம் பெருமானை அரசன் பன்முறையும் பணிந்து அரக்கனைக் கொன்று மீட்டு வருகையிலும், காரோணநாதரைப் பேணிப் பிறகு தன் னாட்டினை யணுகிச் செங்கோல் செலுத்தினான். காயாரோகணம் என்ற பேர் காரோணம் என்றாயிற்று. நம் பெருமாற்கும் காரோணநாதர் எனும் பேர் வழங்கலாயிற்று. இதுகாறுங் கூறிப் போந்ததினால் விசுவநாதப் பெருமான், நவகன்னியர்களால் பூசிக்கப்பெற்றவர் என்பதும், காரோணநாதர் என்னும் திருநாமம் பூண்டவர் என்பதும், அத்தலம் காரோணம் என்று வழங்கப்படுவது என்பதும் பெற்றாம்.

(வரும்.)

ப. தி. சோ. குமாரசாமிசெட்டியார்,

கும்பகோணம்.

இலக்கியப் பகுதி.

சீவக சிந்தாமணி.

௩. காந்தருவ தத்தையா ரிலம்பகம்.

(வெண்டாமரை ௩, 89-ம் பக்கத் தொடர்ச்சி.)

காந்தருவ தத்தை யாழ் வாசித்துப் பாடுதலாலே முன் மெய்ம் மறந்து வீழ்ந்த கின்னரமிதுனங்களெல்லாம், அங்ஙனே யனைய அரசிளங் குமரர் வீணையை வாசித்து உச்சத்தே பாடுதலின், அதற்கு வெருவி அவரைச் சிரிப்பனபோல ஆகாயத்தை யடைந்தன. தத்தை யாழை வாசித்தலாலேவந்த அறிவையுடைய கின்னர மிதுனங்கள், ஆடவர் வீணை வாசித்தலாலே திரும்பிப்போயின; அவை உள்ளே வந்து புகுதும்படி தத்தை கண்டத்தாற் பாடினாள்; அப்பொழுது வந்து சேர்ந்தன; அரசர் தாம் கண்டத்தாற் பாட மீண்டும் அவை போயின. இவ்விதம் அரசர், அந்தணர், வைசியர் ஆகிய முதல் மூன்று வருணத்தாருள்ளே இசையில் வல்ல ஒவ்வொருவரும் தனித்தனியே வந்து பாடியும் யாழ் வாசித்தும் அவளை வெல்லும் வல்லமையில்லாராய்த் தோல்வியுற்று, காலபோரக் கரிந்தகாமர் பங்கயப் பழனமொத்தார். இப்படி ஆறுநாட்கள் சென்றன.

பின்பு இச்செய்தி யுணர்ந்த கந்துக்கடன் மகன் சிங்க வேறு போல்வான் சீவகசாமி யென்பான், தன் கல்வியைத் தோற்றுவிப்பான் ஆண்டுச் செல்லக் கருதி, தன் தோழனாகிய புத்திசேனனை நோக்கி, "நீ சென்று, கன்னியிடத்து வேட்கையாற் செல்கின்றானல்லன்; கல்வி தோற்றுவித்தற்குச் செல்கின்றான் என்று கொள்ளும்படி தந்தைக்குச் சாற்றுக" என்று கூற, அவ்வாறே புத்திசேனனும் கந்துகனுக்குக் கூறினானாக, கந்துகன் கழறுகின்றான்:

"சீவகனுக்கு அறுபத்து நான்கு கலைகளும் முன்பே கைவந்தனவாதலின், யாழ் வாசிக்கச் செல்லுதற்குக் குறையில்லை. ஆயினும் ஆண்டுச் செல்லுதற்கு, இவன்மாட்டு உலகம் கூறும் மிகுதியால் அதற்குக் கட்டியங்காரன் பொறாததாகிய சிறிது குறையுண்டு" என்று செப்புகின்ற காலத்தே, அரசன் மனையினின்றும் பிறைவெல்லு நுதலினாளோர் பெண்கோடி வந்து கூந்தலாகிய உறையை அகல நீக்கி, தாளினை யுடைய குவளை மலரைக் கைந்நீட்டிக் கொடுக்க, அதனை மயிரிலே வைத்த பூவென் றிகழாது, இவளை வரவிட்ட நாகமாலை யென்பவளது குறிப் பாலே ஒரு காரிய முண்டென்று கருதி, அப் பூவைக் கைக்கொண்டான்

40. நல்லவ ேனக்க நாய்கன் றேர்ந்துபூங் குவளைப் போதி
னல்லியுட் கிடந்த வோலை தாளது சலாகை யாதல்
சொல்லுமென் றுய்ந்து கொண்டு துகிலிகைக் கணக்கு நோக்கி
வல்லிதிற் சலாகை சுற்றி யோலையை வாசிக் கின்றான்.

அங்ஙனம் ஓலையை வாசிக்கின்றவன், "கட்டியங்காரன் தீயுட் பொன்போல வெம்பி நஞ்சை யுண்ட கடவுள்போலக் கனன்று இன்று இப்பொழுது எனக்குச் சொன்னான்; ஆதலின் பெரிதும் சினந்து சீவகனைக் கொல்லத் தொடங்கியே நின்றான்; இனிச் சீவகனை நகரத்தினின்றும் போக்கி ஒரு காவலுடைய இடத்தே வைப்பாயாக" என்று வாசித்தான்; வாசித்து, ஓலை கொண்டுவந்தவளைப் பார்க்க, அவள், "பெரியோய்! முன்னே நடந்ததொரு செய்தியை மொழிவேன்" என்றாள். அது கேட்ட கந்துகன், புத்திசேனனை நோக்கி, "இவள் கூறுகின்ற இதனை நீ கேள்" எனலும், புத்திசேனன் கேட்டிருப்ப, அவள் தான் கண்ட செய்தியைக் கழறுகின்றாள்:

"இராசமாபுரத்தே, இயலாசிரியன், ஆடலாசிரியன், யாழாசிரியன், இசையாசிரியன், குழலோன், தண்ணுமை முதல்வன் முதலிய நடையறி புலவர்கள் திரண்டு நாடகம் காண்பதற்கு, கூத்துப் பயிலிடத்தை யலங்கரித்து, அரசனோடு ஆலோசித்தலாலே சீவகனை யழைத்து வருகவென, சீவகனும், தோழர்களும் அந் நாடகத்தைக் காணுதற்குப் போயினார். அப்பொழுது அந் நடையறி புலவர்கள் சீவகனை நோக்கி, "ஐய! சீவக! நீ சாத்திர முறைமையால் அநங்கமாலை யென்னும் நாடகப் பாத்தையை இடமறிந்து அலங்கரிப்பாயாக" என்று கூறுதலும், சீவகனும் விண்ணுலகாம்பையும் வெள்கும்படி அநங்கமாலையை உடன் முழுதும் அலங்கரித்தான்.

அலங்கரித்த பின்பு, தோற்போலி முழவும் யாழும் துளைபயில் குழலும் ஒலியா நிற்ப, காற்றிற்கு நுடங்குகின்ற பூங் கொம்புபோல

---

40. அப் பூவை வாங்கின கந்துக்கடன், நாகமாலையின் குறிப்பை விசாரித்துப் பின்பு குவளை மலரினது தாள் தானே தனது அக விதழினுள்ளே யிருந்த ஓலையைச் சுற்றி வாசித்தற்குச் சலாகை யாதலைச் சொல்லாநின்றதென் றாராய்ந்துகொண்டு துகிலிகைக் கணக்கா லெழுதின எழுத்தைப் பார்த்துத் தாளாகிய சலாகையிலே வரி எற்றிழிவு படாதபடி வலிமையாய்ச் சுற்றி ஓலையை வாசிக்கின்றான்.

துகிலிகைக் கணக்கு – எழுதுகோல்; இங்கு அதனா லெழுதிய எழுத்திற்கு ஆகுபெயர்.

வந்து திரையை விட்டு, கைத்தலங்கள் காட்டி, மேலே யெழ வெருண்டு பார்த்துத் துவண்டு, தோற்றினுள் மூகஞ்செய்கோலம் துளக்கினுள் மனத்தையெல்லாம். கண்கள் நடிப்பிற் கேற்பப் பிறழ்ந்தாட, அதற்கேற்பப் புருவ மசைய, அப்பொழுது இருந்து காண்பார்க்கு நெஞ்சு நிலைகுலைய,

41. செங்கதிர்ச் சிலம்பு செம்பொற் கிண்கிணி சிலம்பக் கோதை
பொங்கப்பொன் னோலை வட்டம் பொழிந்துமின் னுகுப்பப் போர்த்த
குங்குமச் சாந்து வேய்ந்து குண்டலந் திருவில் வீச
வங்கதி ரார மின்ன வரிவைகூத் தாடு கின்றாள்.

“இடையும் ஒன்றே வேறு காவலிடையுமில்லை; இது முரிந்தால் தாய்க்கும் ஒரு பிள்ளையுமே வேறில்லை, அதனை யறிந்தும் அருளில்லையாக, இரும்பாற் செய்த மனத்தையுடைய இக் கொடியோர் இருந்து காண்பாராக; இவரிது முடிவுபோகக் காண்ட லறிந்தும் அரங்கின்மேல் இவளைவிட்ட தாய் கொடியளோ? அன்றேல், சுரும்புசூழ் கண்ணி சூட்டியவர்கோலோ கயவர் சோல்லீர்” என்பாரும், பூந்தாமக் கோடியாடக் கண்டாரேல்லாம் புனமயிலே யன்னமே பொன்னங்கொம்பே, யாந்தா மரைமகளே யல்லளாயின் அமரர்மக ளேன்பாரு மாயினுரே. அன்றியும், மெய்யுருகிக் கண்ணுருகி நேஞ்சுருகிக் காம வேயில்வேண்ணேய்ப் பாவைபோல் மேலிகின்றுரே. அங்ஙனமாம்படி,

42. ஆடவர் மனங்க ளென்னு மரங்கின்மே லநங்க மாலை
யாடினுண் முறுவ லென்னுந் தோழியை யையன் காண
வோடரி நெடுங்க ணென்னு மோலையை யெழுதி விட்டாள்
வாடிய வாறு நோயு முரைத்துவார் கொடிய னுளே.

---

41. அநங்கமாலை, சிவந்த ஒளியையுடைய செம்பொன்னுலாகிய சிலம்பும் கிண்கிணியும் ஒலிக்கவும், பூமாலை விசையா லெழுந்து நிற்பவும், பொன்னோலை ஒளியை வட்டமாகச் சொரிந்து சிந்தவும், குண்டலம் உடம்பை மறைத்த குங்குமச் சாந்தைத் தீண்டி அழகிய ஒளியை வீசவும், அழகிய ஒளியையுடைய முத்து முதலியவற்று லாகிய வடங்கள் மின்னவும் நடனமாடா நின்றாள்.

42. அநங்கமாலை, மைந்தாது மனமென்னும் நடன சபையிலே ஆடினுள்; ஆடி, ஒழுங்காகிய கொடியை யொத்த அவள், தன் மேனி மெலிந்த படியையும் காம நோயையும் சொல்லி, செவ்வரி பரந்த நீண்ட கண்ணென்கின்ற ஓலையை யெழுதி, அதனைப் புன்சிரிப்பென்கிற பாங்கி கையிலே கொடுத்து அவனைச் சீவகன் பார்க்கப் போகவிட்டாள்.

அவள் சீவகன்மீது வேட்கையுற்றும், தன்னை அவன் விரும்பாமையை யறிந்து, நாடகமகளாதலால் தன் னெஞ்சு வருந்தாதபடி அதனைத் தேற்றுகின்றாளாகச் செப்புகின்றாள் :

43. வளமல ரணியப் பெற்றேன் வால்வளை திருத்தப் பெற்றேன்
களனெனக் கரையு மல்குல் கையினாற் றீண்டப் பெற்றேன்
இளமுலை சுமந்து பெற்ற வருத்தமு மின்று தீர்ந்தேன்
உளமெலி மகளி ரெய்து மின்பமு மின்று பெற்றேன்.

என் றுட்கொண்டு தன் மனத்தைத் தேற்றிப் பின்பும் அவள் கட்டியங்காரனை நோக்காளாயினாள்; ஆதலால் அவ்வரசன், கூத்தெல்லாம் முடிந்த பின்னர், சீவக னிடத்து அவளுக்கு வேட்கை நிகழ்ந்தமையை அவளது குறிப்பாலே தெரிந்து அம் மடந்தையை வலிதிற் கொண்டு நீங்கித் தன் மனையினுள்ளே புகுந்தான். புக்க பின் அவனது மனத்திலே சீவகனைக் கொல்லவேண்டுமென்னும் கோபம் நிலைபெற்றது. அங்ஙனம் செற்றம் நிகழாநிற்க, கட்டியங்காரன் அநங்கமாலையைப் போகாமற் றடுத்து, பிணத்திலிருக்கும் காக்கை அழகிய தாமரைமலரைப் புல்லிக் குடைந்தாற்போல, அவள் தான் சூடியிருந்த * முல்லை யெல்லாம் பறித்திட்டான். அவன் அங்ஙனம் புணர்ந்த வளவிலே, அணங்குபோல்வாள் அநங்கமாலை, "மேகலையிடத்தே அழிவில்லாமையை நீக்கி, கண்ணால் தனத்திலே யெழுதி, செவ்வாய் பயந்த தேன்பருகி, இங்ஙனம் முறைமை யறிந்து இன்பக் கடலி லழுந்துகின்ற சிலைவலாய்! நம்பி! சீவகசாமி! நீ வந்து தழுவுவாயாக" என்று கடலொலிபோல அரற்றா நிற்பள். கட்டியங்காரன், அநங்கமாலை தன்னருகே யிருந்து வேறொருவனது நன்மையை அங்ஙனம் கூறக் கேட்டும் பின்னும் அவளுக்கு உருகி, தன் அமைச்சர்க்கு நெறியல்லா மொழிகளை நிகழ்த்தா நிற்பன்.

அநங்கமாலை — ஓர் நாடகப் பரத்தை. தன் கூத்தினால் அவனுக்கு வேட்கை நிகழ்ந்ததோவென் றறிதற்கு நோக்குகின்றவள், தான் குறித்தன கொள்வானாக நோக்கினமையை உருவகமாகக் கூறினார்.

* சீவகனையே கூடுவே னென்றலின், முல்லை — கற்பு. இதனால் புணருநெறி யறியாமை கூறினார்.

43. சிறந்த பூக்களைச் சூட்டப்பெற்றேன்; வெள்ளிய வளையைத் திருத்தமுற அணியப்பெற்றேன்; மேகலைகள் களகளவென்று ஒலிக்கின்ற அல்குலைக் கையினால் தீண்டப்பெற்றேன்; இளமுலை சுமத்தலாலடைந்த வருத்தமும் இன்று தீர்ந்தேன்; ஊடலாலே மனம் வாடிய மடந்தையர் பெறுகின்ற இன்பத்தையும் இன்று பெற்றேன்.

44. விலங்க லன்ன வேக வேழ நான்கு வெல்லு மாற்றலன்
கலங்க லந்தி லங்கு மார்பிற் கந்து கன்ம கனென
நலங்க லந்து ரைக்கு மாவிந் நன்ன கர்க்கு மன்னனே
வுலங்க லந்த தோளி னீரு ரைமி னீவி ரென்னவே,

அமைச்சர் கூறுவாராயினர்: "சீவகன் இந் நகரத்திலே ஆயிரம்பேர் திரண்டும் தொட்டெடுக்க முடியாத திரள் கற்றூணை ஒரு தோளிற் றூங்கி விளையாடினன்; பின்பு யானைகளால் ஒட்டி யெடுக்க முடியாத ஓரிரண்டு கல்லினையும் விட்ட லர்ந்த போது போல வேந்த லேந்தி நீக்கினன்.

வேடர் கொடிய வில்லாலே வெள்ளமாம்படி அம்பு மழையைச் சொரிதலாலே நமது படை இருமுறை யுடைந்த பின்பு, மேகம் பொழி கின்ற மழைத் தாரையைப்போலக் கணைகளைச் சொரிந்து பெரிய பசுக் கூட்டத்தை மீட்டு வந்து, அஞ்சி லோதி யார்பு னைந்த செஞ்சோன் மாலை சூடினன்.

இன்னும் சொல்லினல், அச் சீவகன் அவ்விடத்து நாம் பசி கொண் டிளைத்த பொழுதிலே இனிய பயற்றம் பருப்போடு சேர்ந்த சோறு ஆயிரம் பானையும், நறுநெய் வெள்ளமும் கருப்பஞ்சாறும் ஆயிர மாயிரங் குடமும் தாங்குவித்து வந்து நாம் உண்ணும்படி தந்து பசியைப்

முன் சீவகன், நகை முடிக் கோதை சூட்டுதலால் மலரணியப் பெற்றேனென்றும், பட்டிற்கலை நலங்கொளுத்தியிடுதலால் அல்குல் தீண்டப் பெற்றேனென்றும், குருதிச் சாந்தும் ஆரமும் பூணும் சேர்த் துதலால் முலை சுமந்து பெற்ற வருத்தமும் தீர்ந்தேனென்றும், பரியக முதலியன பாதத்தே சேர்த்துதலால், தான் விரும்பி ஊடற்காலத்தில் காலைத் தீண்டி யூடல் தீர்த்தற்குரிய மகளிர் பெறுமின்பமும் பெற்றே னென்றும் கூறினாள்.

வளை திருத்தல் ஈண்டுக் கூறவே, ஆண்டு அணிதல் பெற்றாம்.

44. திரண்ட கற்றூணை யொத்த தோள்களையுடையவர்களே! ஆபரணங்கள் பொருந்தி விளங்குகின்ற மார்பினையுடைய கந்துக்கடன் புதல்வனாகிய சீவகன், மலைகளையொத்த மத வேகத்தையுடைய நான்கு யானைகளை வெல்லும் வன்மையையுடையவன் என்று உலகமெல்லாங் கூடி அவனது நன்மையைக் கூறாநிற்கும். இவ் வழகிய நகரத்திற்கு இவனே அரசன், நீங்கள் கூறுவீராக என்று சொல்லா நிற்க.

கோபத்தால் இங்ஙனம் கூறினன்.

போக்கினன்; ஆதலின் அவன் வலியனுமாய் நமக்குதவியும் செய்தான்" என்று அம் மந்திரிகள் கூற, அதற்குக் கட்டியங்காரன் மகிழ்ச்சியடையானய், இவர் கருத்தாலும் அவன் வலியாலும் இனி அரசும் இழந்தேனல்லனே என்றுட்கொண்டு, இச் சீவகனைக் கொல்லும் வழிதான் யாது என்னும் சூழ்ச்சிதன்னிடத்தே நின்றான். இது நடந்த செய்தி" என்று ஓலை கொண்டுவந்தவள் கூறினாள்.

அதனை யுணர்ந்து, கந்துகன் ஓலையைக் கொடுத்து அவட்கு, "மாலைக் காலத்திலும் அங்குப் பிறக்கின்ற சொல்லை அடுத்துக் கேட்டு வா" என்று கூறி மணிக் குழையையும் முத்து வடத்தையும் மறைவாகக் கொடுத்து அவளைப் போக்கி, புத்திசேனனை நோக்கி, "அவன் கருத்து அப்படியா யிருத்தலை ஐயமறத் தெரிந்து நாகமாலை கூறினாள்; அது யான் ஓலை வாசகத்தே விளங்கினேன்; இனிக் காரியம் இத்தன்மைத்தா யிருந்ததாதலின், படை யமைத்துக்கொண்டு ஆண்டுச் செல்வீராக" என்று கூறினான்.

(வரும்.)

பத்திராதிபர்.

சாத்திரப் பகுதி.

உலகு.

உலகிலுள்ள ஆன்மகோடிகள் பலவற்றுள், ஆறறிவுடைய நாம் இன்புற்று மாடமாளிகை முதலியன புதுக்கி, நிலவளமாதிப் பலவளஞ் செழிக்கச் சேண்வரை புகழோங்கத் திகழ்கின்றனமன்றே? இவ்வுலகமானது தன்னு ளெவையு மடக்கியுள்ளதாய்த் தானே தனித்து ஒப்பற்றதாய் விளங்கி வருகிறது. ஆதலின், இவ்வுலகுளா ராகிய நாம் பேரவாக் கோடல் பெரு நிலத்தின்கண்ணே. இவ் வவா வளர வளர, ஆயிரப் பதிணயிரக் கணக்கான காணி பூமியைத் தேடி, என் நிலம், என் பூமி யென மயங்குகின்றேம். இதன்மேல், மாலெறி வனப்பார் மங்கையர் மயலிலும், மதியை மருட்டும் வளர் தனத்திலும் வரையிலாது மனத்தை விடுகின்றேம். இங்ஙனம் படிப்படியாய் நிலம் உயரவும், தனம் உயரவும், மடவார் மயல் உயரவும் கண்டு, ஈதே சாசுவதமென்று பண்டைக்காலந் தொட்டு இத்தாலமிசைப் பல் வேறு ஜனனமெடுத்து வதிகின்றனம்.

ஐயன்மீர்! இதுவரைக் கூறிப் போந்த விடயங்களும் இவைபோல்வன பிறவும் நித்தியமென்றும், இவ்வுலகமநித்தியமன்றென்றும், இதில் வாழும் நமது வாழ்க்கை யழியாதென்றும், (வேரில்லா மரம்போன்ற) ஓர் நம்பிக்கையற்ற ஆதாரத்தினைக்கொண்டு வாழ்கின்றோம். அஃதெவ்வாறுளதெனின் :—

வரிப் புலிக்கஞ்சி யோடிய மனிதனொருவன் அவ்வரிப் புலியால் மேன்மேலும் துரத்தப்பட்டு ஓர் பாழ்ங் கூபத்தினுள் வீழ்ந்தான். ஆண்டைப் பெருவிடம் பூண்ட கருநாகமொன்று (இவனைக்) கடிப்பானனாக, (அரவங் கடியா வண்ணம்) அங்கு நான்றிய அறுகம்புற் கற்றையினைப் பற்ற, அக் கற்றையினைச் சிற்சில சுண்டெலிகள் கடித்துவர, கடியா தெஞ்சிய சில புற்களைப்பற்றி நாலுந் தறுவாயில், கரைமேல் பாதபத்துள்ள கூட்டினின்றும் ஓர் துளி நறவம் சிந்தி வாயிடை வீழ, (தன் அரிய பெரிய கஷ்டங்களை யோராது) அந்நறவினை மாந்தி மகிழும் அவ் வேழையின் வாழ்க்கையை யொக்கும். இத்தகைய சங்கட வாழ்விற்குச் சாலப்பற்றுள்ளது இவ்வுலகம். இவ்வுலகே துக்க காரணமாயுள்ளது. இஃதோர் பொருளென மதியாது விடுத்தாற் பெரும்பே றடைவோம். இஃது சஞ்சலத்திற்கும் பிறப்பிற்குங் காரணமென்றே மெய்த்திறம் வாய்ந்த உத்தம ஞானியர், சித்தத்தில் மதியாராகி "மித்தை" எனப் பெயர் தந்தனர். மித்தை யென்பது பொய். பொய்யென்றால், மெய் யொன்றுளவாக வேண்டும். அதுதான் பிரமம். இது உண்மை. இது சத்தியம்.

மித்தை யென்று வத்து இன்மையை யன்றோ கூறல்வேண்டும்? உலகம் கரதலாமலகம்போல் எளிதில் விளங்குகின்றதே. கைப்புண்ணிற்குக் கண்ணாடிகொண்டு காண்டல் கற்றோர்க் கழகாவெனின், கீழே அதற்கு உதாரணங் காட்டுதும்.

பல்லாயிரக் கணக்காய்த் திரவியஞ் செலவிட்டுப் புதுக்கிய சிறந்த மாளிகை சின்னாட் செல்ல அழியவும், மேடு பள்ளமாகவும், பள்ளம் மேடாகவும், காடு நாடாகவும், நாடு காடாகவும், நிலம் நீராகவும், நீர் நிலமாகவும், சமவெளி குன்றுக ளடர்ந்ததாயும், குன்றுக ளடர்ந்தது சமவெளியாயும், மலை முதலியன இடிந்தும் உடைக்கப்பட்டும், அகழிகள் தூர்ந்தும், தூர்ந்தது ஆழாழியாயும் தோன்றி யழிவதை நோக்க, உலகம் உண்மையென உசாவுவார் உளரோ? இதுபற்றியே :—

"ஜகத்தை இந்திர ஜாலமாய்ப் பார்க்கிறவனாயும்"

(சாமவேதம் மைத்ரேய உபநிஷத்)

"மித்தை எது? இல்லாத பிரபஞ்சத்தைப் பிரம்மத்தில் ஆரோபிப்பது."

(எசுர்வேத சர்வ சாரோபநிஷத்)

"பிரம்மம் சத்யம். சகத் பொய்."

(சுக்ல எசுர்வேதம் நிராலம்போபநிஷத்)

"பழுதையிற் பாம்பு முதலியனபோற் பிரபஞ்சத்திற் காதாரரூபமாய், பிரம்ம சத்து மாத்திரமே சூழ்ந்துகொண்டிருக்கிறது. ஆகையால் ஜகத்தில்லை."

(ரிக்வேதம் ஆத்ம போதோபநிஷத்)

"சகத் முழுதும் சங்கற்ப (மனத் தோற்றம் அல்லது எண்ணம்) மாத்திரத்தினு லுண்டாகின்றது. சங்கற்ப மாத்திரத்தினுலேயே சகத் தோற்றம்."

(எசுர்வேதம் வராகோபநிஷத்)

"உலக முழுதுஞ் சொப்பனம்போ லுறக்கண் டிடுவா னெவனுளும்."

(சூத சம்ஹிதை)

"பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ் சித்தவோ."

(திருவிளையாடற் புராணம், பரிநரியாக்கியபடலம்)

"ஆதலாற் பிரமமொன்றே நித்திய மலகைத் தேரிற், பேதுறத் தோன்று நீரிற் பிரபஞ்ச மருண்டு தோன்றும்."

(கூர்ம புராணம், சாங்கிய யோக அத்யாயம்)

"அனகற் கன்னிய மாயவை யெல்லாம் பொய்யாகிப் போதலாலே."

(சூத சங்கிதை, பஞ்சாக்கர மந்திர முரைத்த அத்யாயம்)

என வேத ஸ்மிருதி புராணுதிகள் விளம்புகின்றன. பரம ஞானிகளாயுள்ள மகான்கள், உலகமென்பது தம்மில் வேருயதென நினையார். அது சதமெனவுங் கருதார். கற்பிதமென்றே கொள்வர். கற்பிதமாவது இல்லாததொன்றை யுண்டென ஆரோபிப்பது. கானலை நீரெனவும், கயிற்றினை அரவெனவும், இப்பியினை இரசிதமெனவும் உண்மை யறியாது மருளல்போல், பிரமத்தினை யறியத் தோற்று மிதனை மித்தையென விலக்கல் விதியாம்.

123

"கானலிடைத் தெண்ணீருங் கயிற்றினில்வா ளரவுமலை கடலிற்பட்ட
கூனமுது கிப்பியினில் வெள்ளியுமம் முதலுண்மை குறிக்கிற்றீரும் [ல்
ஆனவைபோல் நினையறிவிற் றேன்றுசக மனைத்துநில்லா தழியுமாற்று
தேனவிழ்பூங் கடுக்கையணி செல்வநின தறைகழற்றுள் சென்னி சேர்ப்
[பாம்."

(காசிகாண்டம்)

"சத்தியமே சத்தியமே சகமே யில்லை."

(ரிபு கீதை)

எனவும் வற்புறுத்துகின்றன.

மேலும், உலகம் காரியமாம். காரியமெல்லாம் சத்தியமாகா. அசத்தியமாம். இங்கு உதாரணங் காட்டுவாம். கடம் உண்மைபோற் றேன்றினும் சோதனை செய்ய மண்ணையன்றி வேறில்லை. அங்ஙனமே நூலின்றி ஆடையில்லை. இது பிரத்தியக்ஷமாம். இதனுனே பிரமத்திடத் திது மித்தையாம். உலகம் அநுபவத்திலுள்ளது. மித்தையெனக் கூறல் எவ்வாற்றானும் பொருந்தாதெனுங் கடா நிகழும். அக் கடாவிற் கிண்டு விடை கூறுவாம். பல்கதிர் பரப்பும் பரிதி தேவனைத் தூரத்து நின்று நோக்க, சிறிய வளவாய்த் தோற்றுவன். நூற் கருவிகளைக் கொண்டும், சோதனைக் கருவிகளைக் கொண்டும் நோக்க, இப் பூவினைவிடப் பல்லாயிர மடங்கு பெரிதெனப் பண்டிதர் பகர்கின்றனர். நூலறிவிலார் எதை எதை எப்படி (சாமானியமாய்)க் கண்டனரோ, அதை அதை அப்படியே உண்மையென்பர். அது பொருந்துமா? நாம் கண்டவற்றை நன்காராய்தல் வேண்டுமன்றே? பொருளல்லாததைப் பொருளென மயங்கக்கூடா தன்றே? அறிவைக்கொண் டாராய்தலால் உண்மை நிதர்சனமாம்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

(குறள்)

உலகம் சத்தியமென்று, சிறுவர் ஆதியாய்த் தலை நரைத்துப் பற்கள் விழுந்த பெரியா ரிறுதியாகக் கூறுவர். இது அசத்தியமெனும் ஓர் சொல் அவர் வாயினின்றும் வரப் பார்ப்போமெனின், அது புலிப்பால் கறத்தல்போலாம். இன்னார்க்குத் தருக்காதி சாத்திரங்களாற் றுபித்தல் நன்றும்.

நேசர்காள்! இவ்வுலகமே மித்தையெனப் பல மறையும் பறை யறைய, அதிலுள நம் வாழ்க்கைக் கழிவுவா தகன்றிடுமோ? "ஆயிர மாயிரமாய்ப் புளுகுவோனும் அண்டப்புரட்டனும்" சம்பந்திகளானமாதிரி

தான். பார்க்கப் பார்க்க விசாலமானதும், எத்துணைப் பொருள்சேரினும் வேண்டும் வேண்டும் இடமளிப்பதும், எல்லாம் தன்னுள் ளடக்கிப் பேழைபோலிருப்பதுமாகிய உலகே மித்தையாம். அதன்மேல் வசித்து வாழ்க்கை நலம் பருகும் நாமோ எறும்பாதி ஜந்துக்களுடன் ஒப்ப வாழ்கின்றோம், இறக்கின்றோம், பிறக்கின்றோம். நம் வாழ்வு எத்தகைத்து!

> "பொய்யினான் மிடைந்த போர்வை புரைபுரை யழுகிவீழ."
>
> (நாவுக்கரசு)

> "புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை."
>
> (அரிச்சந்திர புராணம்)

> "பொய்யெல்லா மொன்றாய்ப் பொருத்திவைத்த பொய்யுடலை
> மெய்யென்றால் மெய்யாய் விடுமோ?
>
> (தாயுமானார்)

இத்தகைய காயத்தினைப் போர்த்துக்கொண்டு, இம் மாயத் தோற்றவுலகில் வீடுமுதலிய இருக்கைகள் சமைத்து, கடவுள் தாள் மறந்து, இவ் யாக்கையைத் துறந்து வேறு வேறு யாக்கையை யடைந்து, ஈதே தொழிலெனப் பிறந்து பிறந்து, இறந்து இறந்து, உழன்று உழன்று வாடுகின்றோம்.

அன்பரே! இவ் வாழ்க்கையினையும் அவற்றிற் காதாரமென மனக் கோட்டைகட்டும் இவ்வுலகையும் பொய்யென மறந்து, கானலை நீரென் றெண்ணாது கானலென் றும், பழுதையைப் பாம்பென மயங்காது பழுதை யெனவும், இப்பியை இரசிதமென மயங்காது இப்பியே யென்றும் தெளிதல்போல், சர்வ வியாபக பிரம்மத்தினிடம் உலகு மித்தையென் னும் அறிவுண்டாகித் தெளிதல் வேண்டும். அங்ஙனம் வாழ்வானுக் குலகம் சத்தாய்க் காணாது. இவ்வாறுகொண்டு சாசுவதமாயுள்ள தனிப் பதம் நாடி வாழ்வோமாக. தேகாதிகள் பொய் யென்பதற்கும் பிரமமே மெய் யென்பதற்கு முதாரணம்.

> "விரிந்த பூதங் களினோடு விளம்பிந் தியங்கள் தத்துவங்கள்
> திருந்த கங்கா ரத்தினொடு செறிமுக் குணங்கண் மாத்திரைகள்
> பொருந்து மாயை சிவனிவை பொய்யாம் யாமே பொய்யின்றி
> இருந்தெவ் விடத்து நிலைபெறுவோ மதனாற் றாணா வெனவிசைப்
> [பர்."
>
> (இலிங்கபுராணம்)

செந்தமிழ்க்கவி, K. V. இராமசந்திர ஐயர்.

புத்தக நன்கொடை.

ஒட்டம்பாளையம் ஸ்ரீமான் சு. வேலாயுதசெட்டியாரவர்களால், 1. நல்லாப்பிள்ளை பாரதம், 2. நியாயப்பிரகாசம் ஆகப் புத்தகங்கள் இரண்டும், புதுவை ஸ்ரீமான் திருமுடி – சி. நடராஜசெட்டியாரவர்களால், 1. கந்தபுராணம், 2. திருவிளையாடற்புராணம், 3. பெரிய புராணம் ஆகப் புத்தகங்கள் மூன்றும், முருங்கப்பாக்கம் ஸ்ரீமான் நமசிவாயநாட்டாரவர்களால், பன்னூற்றிரட்டு ஒன்றும், புதுவை ஸ்ரீமான் மா. மோகலிங்கப்பிள்ளையவர்களால், கம்பராமாயணம் ஒன்றும், புதுவைப் புத்தக ஷாப்பு ஸ்ரீமான் அரியபுத்திரநாயகரவர்களால், 1. திருவேங்கடஸ்தல புராணம், 2. திருக்கழுக்குன்றப் புராணம், 3. திருவாலங்காட்டுப் புராணம், 4. திருவோத்தூர்ப் புராணம், 5. திருக்குடந்தைப் புராணம், 6. சீமந்தனி புராணம், 7. அன்னதானமகத்துவ புராணம், 8. வள்ளலார் சாத்திரம், 9. காரைக்காலம்மையார் சரித்திரச் சுருக்கம், 10. காசிகாண்டம், 11. விஞ்ஞானதீபம், 12. பலபாடற்றிரட்டு ஆகப் புத்தகங்கள் பன்னிரண்டும் நமது கலைமகள் கழகத்தின் புத்தக நிலையத்திற்கு நன்கொடை யளிக்கப்பட்டன.

அன்புகூர்ந்து அரியபெரிய புத்தகங்கள் கொடுத்த இப் பரோபகாரசீலர்களுக்கு, புதுவைக் கலைமகள் கழகத்தார் பெரிதும் நன்றி செலுத்துகின்றார்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
கழகத்தின் காரியதரிசி.

புத்தக வரவு.

பலதீபிகை.

இது அரிய பெரிய ஓர் சோதிடசாத்திரம். வடமொழியில் மந்திரேசுவரமுனிவர் இயற்றியது. மிளசை பிரம்மஸ்ரீ வேங்கட கிருஷ்ணையரால் கத்தியரூபமாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால் பார்வையிடப்பட்டு அவர்கள் எழுதிய அருமையான முகவுரையோடுகூடி விளங்குவது. பறங்கிப்பேட்டை ஸ்ரீமான் சு. ஏ. குமாரசுவாமியாச்சாரியாரவர்களும், ஸ்ரீமான் ப. அ. கிருஷ்ணசுவாமிப்பிள்ளையவர்களும் முயன்று அச்சிட்டு வெளிப்படுத்தியது.

கிரகங்களிருக்கும் இராசிகளின் பலன், களத்திரபலன், ஸ்திரீ ஜாதகம், புத்திரபாவம், ஆயுள்பாவம், கிரகசேர்க்கையின் பலன், தசா புத்தியின் விசேடபலன் முதலிய சோதிடசம்பந்தமான பல அமிசங்களையும் இந்நூல் நன்குரக விரித்துக்கூறுகின்றது. எடுத்தபிறப்பின் முன்னிலை பின்னிலைகளைத்தெரிவித்து, சாந்திகள் புரிவித்து மக்களைத் தீமையினின்றும் விலக்குவதாகிய இப் பலதீபிகை ஒவ்வொருவர் கையிலும் இருக்கத் தகுந்ததே.

இதை யாவரும் வாங்கி, மேலுமேலும் இவர்கள் இத்தகைய அரிய பெரிய முயற்சியிற் றலையிடுமாறு இவர்கட்கு ஊக்க முறுவிக்கவேண்டுவது மக்கள் கடமைகளில் ஒன்ருகும். முன்பு புட்பபந்தம் என்னும் நூலை வெளிப்படுத்தினவர்களும் இவர்களே.

வேண்டுவோர், பறங்கிப்பேட்டை ஸ்ரீமான் சு. ஏ. குமாரசுவாமியாச்சாரியாரவர்களிடத்தும், ஷெயூர் ஸ்ரீமான் ப. அ. கிருஷ்ணசுவாமிப்பிள்ளையவர்களிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

ப—ர்.

சமாசாரம்.

புதுவை ஆநந்தாசிரம சாதுமகா சங்கத்தின் இரண்டாவது வருடோற்சவம்.

நிகழும் 1915-ம் ஆ ஜூன் மீ 17, 18, 19, 20 இத்திகதிகளில், புதுவை, கோமுட்டியர் வீதி 40-ம் நெ. கிருகத்தில், ஷெ வருடோற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீமத் கரபாத்ர சிவப்பிரகாச சுவாமிகள் எழுந்தருளியிருக்க, வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர-சுப்பையசுவாமிகள் முதலிய பெரியோர்களும், சென்னை லோகோபகாரிப் பத்திராதிபர் ஸ்ரீமத் கோ. வடிவேலுசெட்டியார் முதலிய வித்துவான்களும் அரிய பெரிய பல உபன்னியாசங்கள் புரிந்து சபையைக் களிக்கச் செய்தனர்.

இவ்வண்ணமே பிரதி வருடத்திலும் இச் சங்கத்தின் வருடோற்சவம் நிராடங்கமாக நடைபெறுமாறும், இதற்குக் காரணராக நின்ற ஷெ சங்கத் தலைவர் ஸ்ரீமான் ஆ. சீ. வேலுசாமிமுதலியார், உதவிச் சங்கத் தலைவர் ஸ்ரீமான் அ. ஜெகந்நாத நாயடு, சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் வி. பா. துப்புசாமிமுதலியார் முதலியவர்களுடைய நன்முயற்சி பெரிதும் பயன்பெறுமாறும் கடவுள் கருணைசெய்வாராக.

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பருய், ஆயுர்வேத ஔஷதசாலே,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

19. சுகந்த ஸ்நாநப்பொடி:— இந்த வாசனேப் பொடியை தினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நாநஞ்செய்து வந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத் தந்து, தேமல், அரிப்பு, சொறி சிரங்கு, கற்ருழைநாற்றம், கை கால் எரிச்சல், மேககாங்கை, சரீர வரக்ஷி, கணச்சூடு, வெடிப்பு, காப்பான், தலேவலி, பொரிமேகம், படர்தாமரை, மேக ஊரல், கிரந்தி முதலிய இன்னும் அநேகவித தோலேப்பற்றிய வியாதிகள் தீரும். நல்ல வாசனேயும், காந்தியும், லக்ஷ்மீகாமும், ஆரோக்கியமு முண்டாகும். அரைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பி 1-க்கு விலே அணு 8. வி. பி. செலவு அணு 3 பிரத்தியேகம்.

20. சஞ்சீவி மாத்திரைகள்:— இம்மாத்திரைகளினுல் தலேவலி, தலேபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷ சுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கணே முதலிய நோய்கள் தீரும். அரைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலே சீசா 1-க்கு அணு 10. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணு 5 பிரத்தியேகம்.

21. கோரோஜனே மாத்திரைகள்:— இம்மாத்திரையினுல் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், இளேப்பு, வலி, மயக்கம்,

தெற்குத்திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், மூக்கு மாந்தம், ஊது கணம், செவ்வாப்பு, கடுவான், காப்பான், பால்மாந்தம் முதலிய எல்லா மாந்தங்களும்; கருங்கிரந்தி, செங்கிரந்தி, மலசலக்கட்டு முதலியதுகளும்; மலை சுரம், முறைசுரம் முதலான பலவித சுரங்களும் அடியோடு நீங்கும். சீசா 1-க்கு அணா 10. 1 முதல் 6 சீசாக்கள் வரையில் வி.பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

22. காப்பானுக்கும் சொறி சிரங்குக்கும் மருந்து:— இம் மருந்தை டைரக்ஷனில் சொல்லிபபடி மேலுக்கு மட்டும் உபயோகித்து வந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமைச்சல்களும், சொறி, சிரங்கு, வரட்டுச்சொறி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சில பாகங்களில் கண்டு அதிக நமைச்சலையும், தொந்திரவையும் தருகின்ற எவ்வித காப்பான்களையும் வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும் பர்மாவிலும் அனுப்ப வி. பி. செலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

23. கேசசுவாசனி:— உசிதமான வாசனை சாமான்கள் சேர்ந்து செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கறுப்பாகவும் வளரும். கண்கள் குளிரும். தலைநோய் போகும். மூளையைப் பலப்படுத்தும். மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy,

TANJORE.

N. B. — என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பறங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பறங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

129

சோதிட விளம்பரம்.

ஆரிய நேயர்காள்!

தங்கட்கு ஜாதகம் கணித்துப் பலனெழுத வேண்டினும், ஆலயம், மனை முதலியவைகளுக்குப் பொருத்த பலனெழுத வேண்டினும், புத்திர தோஷ நிவர்த்திக்கு (கர்ம நாடிப்படி) தோஷ நிவர்த்தி சாந்தி விதிகள் எடுத்தெழுதவேண்டினும், நஷ்ட ஜாதகம் கணித்துப் பலனெழுதவேண்டினும் எமக் கெழுதித் தெரிந்து கொள்ளலாம்.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி, ஜோதிஷர்,
ஆரியன் சோதிடசாலைத்தலைவர், திருவாரூர்.

நற்சாக்ஷிப் பத்திரம்.

ஐயா! தாங்கள் எடுத்துக்காட்டிய சாஸ்திர நியாயம் எல்லாம் சரியானதே. (பலன்கள்) சரிவர ஒத்திருக்கின்றன.

இங்ஙனம் தங்கள்

***V. தங்கவேலுசாமித்தேவர்,**
வித்வான் மாப்பிள்ளை,
23 — 4 — 912 கந்த விலாசம், இராமநாதபுரம்.

* ஸ்ரீமத் பாஸ்கரசேதுபதி மகாராஜாவின் அருமை மைத்துனர்.

ரமணி.

ஓர் காதற் கதை.

"கலைமகள்" வெண்டாமரை க-இன், 6-வது இதழிலிருந்து 19 இதழ்களிற் பிரசுரிக்கப்பெற்ற இக்கதை, இப்பொழுது புத்தக ரூபமாக அச்சிடப்பட்டு விற்பனைக்குச் சித்தமாயிருக்கிறது. கலைமகளில் பிரசுரிக்கப்பெறாத பல புதிய விஷயங்கள் இப் புத்தகத்திற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 'டபிள் கிரௌன்' அளவு பதினொரு பாரங்கொண்ட 176 பக்கங்க ளடங்கிய அழகிய புத்தகம். "கலைமகள் பத்திராதிபர்" எழுதிய முகவுரையை அணியப்பெற்றது. பிரதி ஒன்றுக்கு விலை அணா 10. தபாற்கூலிபிரத்தியேகம்.

சு. அ. சுப்பராயப்பிள்ளை,
9, காமாட்சியம்மன் கோயில் வீதி, புதுச்சேரி.

(130

தலைமயிர் நரைத்து ஏன் கிழவர்களைப்போல் காணப்படுகிறீர்கள்?

☞ எங்கள் **தர்பார் கேச கலாபத்தை**

ஒருதரம் உபயோகிப்பதனால் எந்தக் காரணத்தினால் உண்டான நரைத்த கூந்தலைக் கருக்கச் செய்யும். இது கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும், கூந்தலுக்குப் பலஹீனத்தைப் போக்கடித்து அவைகளுக்குப் பலத்தையும் கொடுக்கும். சர்மத்துக்கு எவ்வித தொந்தரவில்லாமல் அதி அற்புதமாய் வேலைசெய்யும். ஒரு தடவை தருவித்துப் பார்த்தால் நம்பிக்கை தெரியும்.

புட்டி விலை புருஷ் உடன் ரூ: 1 — 0 — 0
போஸ்டேஜ் பிரத்தியேகம் 0 — 4 — 0

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும் ரோமத்தில் பூசுவதனால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்.
ஏஜெண்டுகள் தேவை.

3 கேகு உள்ள பெட்டி 1-க்கு 0 — 14 — 0
ஒரே தடவையில் 2 பெட்டிக்கு 1 — 10 — 0

வி. ஏ. எஸ். பாணி,
நெ. 3. இருளப்பன் தெரு, மதறாஸ்.

சந்திரசேகரன் சரித்திரம்.

இஃது ஓர் மகானுபாவனல் எழுதப்பட்ட "திரிகால மாயப் பிரசன்ன நவீனம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது புத்தகம். இப் புத்தகம் இடைக்கிடையே சந்தர்ப்பத்திற் கேற்ற வர்ணமெட்டுகளமைந்த பல இசைப்பாட்டுகளுடன் கல்விமான்களால் ஒரு கற்பனை நாடகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இக் கதை படிக்கப் படிக்க இன்பந் தருவதுமன்றி, ஆண்மக்களும் பெண்மக்களும் உலகத்தில் அறிந்து நடக்கவேண்டிய நீதி பலவற்றைக் கற்பிக்கும் ஓர் உத்தம ஆசிரியன் போன்றும் விளங்குவது. எந்த மதத்தினர்களும், ஆண் பெண் சிறுவர் முதலியயாவர்களும் படித்துப் பயனடையும்படி மிக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. பலவிதமாகச் சொல்வதிற் பயனென்னை? உண்மையில் இப் புத்தகம் படிப்பவர்களுக்கே இதன் இன்பம் விளங்கும்.

புத்தகம் நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் மிக அழகாக அச்சிட்டு பயிண்டு செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இதன் விலை அணா 6.

ஜெகசேகர சத்தியவதனி.

மேற்கூறியதுபோலவே இதுவும் "பஞ்சாஸம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது ரஸமாகிய ஒரு நாவல்.

இதன் விலை அணா 12.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி முற்பண மனுப்பியேனும், வி. பி. மூலமாகவேனும் பெற்றுக் கொள்ளலாம்.

போன். நல்லத்தம்பிமுதலியார்

No. 34. ஆநந்தரங்கப்பிள்ளை வீதி,

புதுச்சேரி.

50 சாமான்கள் இனும். 50 சாமான்கள் இனும்.

அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

ராஜா சுந்தரி ரோஜா.

கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

50 இனும் சாமான்களுடன் டின் 1-க்கு ரூ. 1—0—0.

தலைமயிர் அழகாய் இருக்க வேண்டு மென்றும், உதிர்ந்து போகாம விருக்கவேண்டு மென்றும், விரும்புகிற ஸ்திரீகள் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக்கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் குணத்தை தெரிந்து வாங்கி உபயோகிக்கவும். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது. தலையில் தடவி சீவிக் கொண்டால் வெகுதூரம் இதின் வாசனை வீசும். கூந்தலை நீளமாய் வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்துக் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும்நிவர்த்தி செய்து, கண்களில் நீர்வடிதல், தலைமயிர் சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தலைவலி, சொறிசிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து, தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதின் அருமை தெரியும்.

இது தேசமெங்கும் நல்லபெயர் பெற்றிருப்பதே இதின் புகழ்ச்சிக்கு அத்தாக்ஷியாகும்.

இனும் சாமான்களின் விபரம்:— ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. அழகான முகம்பார்க்கும் கண்ணாடி 1. தாம்பூல மாத்திரைகள் 30. தந்தச்சீப்பு 1. ராஜா ராணி கார்னேஷன் பெட்டி 1. ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6. அத்தர்பில்லை 1. சந்தனப் பில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள சுந்தரமான புரூக்ஸ் 1.

தைரியலட்சுமி அண்டுகோ.

3, இருளப்பன் தெரு, மதராஸ்.